# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை


6 44

18-5-70.



செங்கை மாவட்ட உள்ளாட்சித்துறைத் தொகுதியிலிருந்து தமிழக மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. வெங்கா அவர்கள் 22—4—70ல் பதவியேற்ற காட்சி.


விலை 20 காசு

17-5-70

காந்திதாசன், திருமங்கலம்.

**காந்தியடிகள் நூற்றாண்டு விழாக் காலத்தில், காந்தியாரது சிந்தனைகள் செயல்படுத்தப்பட்டனவா?**

நிச்சயமாகச் செயல் படுத்தப்பட்டிருக்கின்றன. காந்தியடிகள், சுதந்திரத்திற்குப் பிறகு, காங்கிரசுக் கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று கூறிவந்தார். இதனைச்சரியாக அந்நூற்றாண்டு விழாக்காலத்தில்தான் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள். 1972ல் முழுவதுமாக நிறைவேற்றி வைக்கப்பட்டுவிடும்.

தங்க. கலை அரசு. கருக்குப்பேட்டை.

**தமிழ் மொழியில் கவிதை, காவியம், சிறுகதை, நாவல், நாடகம் முதலானவை, எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளன? இவைகளில் சொந்த இலக்கியங்கள் எவை, இறக்குமதிகள் எவை எவை?**

கவிதை, காவியம், சிறுகதை, நாவல், நாடகம் முதலானவைகளில், கவிதைகளும், சிறுகதைகளும் சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ளன. கவிதை உணர்வு, வேறெப் போதையும்விட, இப்போது மிகுதிப்பட்டிருக்கிறது. படிப்பவர்களிடையே அல்ல—எழுதுபவர்களிடையே. அதிகம் பேர் எழுத முன் வருகிறார்கள் என்றால். அதிகம்பேர் அதனை விரும்புகிறார்கள் என்றும் பொருள் கொள்ள முடியும். ஆகவேதான் வளர்ந்திருக்கிறது என்று கூறலாம். சிறுகதைகளும் வளர்ந்துதான் இருக்கின்றன. ஆனால் நம்மிடையே அல்ல. நமது சுவைகள், அந்தத் துறைகள் இன்னமும் முழுமைபெறவில்லை. யாரோ சிலர் வளர்த்துக்கொண்டிருக்கும் அம்மாமிக் கதைகளின் மூலம் அது வளர்ந்திருக்கிறது. நாடகம் வளர்வது இப்போது பெரும்பாலும் தமிழக வானொலி நிலையங்களால்தான் என்று கூறியாக வேண்டும். பத்துக்கு இரண்டு பழுதில்லை என்பதுபோல் நம் பண்பாடுகளைக் கொஞ்சம் கொஞ்சம் அவை மூலம் பரப்புகின்றன வானொலி நிலையங்கள். காவியம் வளர்கிறதா? வளர்க்கப்படுகிறதா? என்ற வினாக்களுக்கு, நூல் வெளியீட்டாளர்களது கோணியமுகம் தெளிவளிக்கிறது. இலக்கியங்கள் சொந்தமானவையாயினும்,

# வினா-விடை

இறக்குமதியானவையாயினும் நம் மனதை வருடிவிட்டு, நம் நேரத்தை அவைகள் தம் வயப்படுத்திக்கொள்ளுமானால், அவை பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை. ஏனெனில் நம் தனித்தன்மை, இன்னமும் 'கொஞ்சம்'' உயிரோடிருக்கிறது.

• • •

**ஒருமொழியில் எழுதப்படும் நூலை அதே மொழியில் படிக்கும்போது ஏற்படும் ரசனை, உணர்வு, மற்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டு படிக்கும்போது ஏற்படுவதில்லையே, ஏன்?**

"ஒன்றன் தனித்தன்மை'' என்று குறிப்பிடுவது அதனைத்தான்! அதனால் தான்!!

வ. வள்ளியப்பன், மணிமங்கலம்.

**ஊராட்சித் தலைவர் தேர்தலுக்கு நிற்க விரும்புவோருக்கு வயது வரம்பு உண்டா? தேர்தல் ஏஜண்டாக நியமிக்கப்படுவருக்கும் வயது நிர்ணயம் இருக்கிறதா?**

எவருக்கும் வயது வரம்பு இல்லை. தேர்தலில் நிற்பதற்கு வகுக்கப்படும் விதிகளோடு, வயதையும் ஒரு தகுதியாக்கிக் கொண்டால் நல்லதுதானே!

ஆர். ராமனுதன், சென்னை.

**சீனநாட்டுச் செம்படையுடன், நமது சீரணியை ஒப்பிட்டவர்கள், இப்போது என்ன சொல்கிறார்கள்?**

தங்களுக்கும், தங்களைச் சார்ந்தவர்களுக்கும் சீரணியில் பங்கு வேண்டும் என்று மனுப் போடுகிறார்களாம் அவர்கள். உண்மையான தொண்டாற்றும் அந்தப் பிரிவு, எச்சரிக்கையாகத்தானிருக்க வேண்டும்.

எம். தென்னன், கண்டரமாணிக்கம்.

**இந்தியாவில் இப்போது வகுப்புக் கலவரங்கள் முளைவிடத் தொடங்கி விட்டது என்பது உண்மையா?**

ஜனசங்கம் பிறந்தபோதே, அதுவும் பிறந்துவிட்டது என்பதை மறைக்கத் தேவையில்லையே!

அறிவுடை நம்பி, சிதம்பரம்.

**கட்சி மாற்றங்களைத் தடுப்பதென்பது, அடிப்படை உரிமைகளை மறுப்பதாகாதா?**

"அடிப்படை உரிமைகள்'' என்பவை பற்றி, சில "அடிப்படை வரைமுறை''கள் தேவை. அது இல்லாதவரைக்கும் இரண்டு பக்கமும் இடியுண்டு.

• • •

**அரசியல் சட்டம் என்பது "புனித''மானதா?**

"புனிதம்'' என்பது, நாம் தருகின்ற மதிப்பினை யொட்டி ஏற்படுவதல்லவா!

மு. ரத்தினம், சிவகெங்கை.

**1972-ல் சிண்டிகேட்; கழகத்துடன் கூட்டுச் சேருமா?**

சேராது என்று சுப்பிரமணியம் சொல்லிவிட்டாரே — தெரியாதா!

★

---

நக்சல்பாரி

## இரகசிய ரேடியோ

இந்தியாவில் எங்கேயோ ஓரிடத்தில் தாங்கள் ஒரு ரேடியோ நிலையத்தை ஏற்படுத்தி இருப்பதாகமார்க்சீய—லெனினிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சி (நக்சல்பாரி ரகம்!) சொல்லிக் கொள்கிறது,

மே மாதம் 1-ம் தேதியன்று இரவு 10-45 மணிக்கு இந்த ரேடியோ முதல் ஒலிபரபபு ஆரம்பித்ததாக நக்சல்பாரிகளின் கட்சிப் பத்திரிகை கூறுகிறது. "இந்திய விடுதலை ரேடியோ'' என்று அதற்குப் பெயர்!

—"தினமணி"
9-5-70 செய்தி

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 17—5—70 | இதழ் 44


# அனைவருக்கும் உணர்த்துகிறது!

இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு வி. வி. கிரி அவர்கள், குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று அறிவிக்கக்கோரி, இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 4 மாத காலமாக விசாரணையிலிருந்து வந்த 4 மனுக்கள், இந்தக் கிழமை தொடக்கத்தில், தலைமை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு, உத்திரவிடப் பெற்றிருக்கிறது.

தலைமை நீதிமன்றத்தின் வரலாற்றிலேயே, இந்த வழக்கில்தான், முதன் முதலாக நேரில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர். இதுபோலவே, இந்தியத் துணைக்கண்டத்தின் மிகப்பெரிய பதவியில் இருக்கும் ஒருவர், சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்பதை மெய்ப்பிக்கும் வகையில், நீதிமன்றத்திற்கே வந்து சாட்சியமளித்து, புதிய வரலாறும் படைக்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்தின் உத்திரவு எப்படி இருந்தபோதிலும், சட்டத்துக்குத் தரப்பட்டிருக்கிற முதலிடம் கருதி குடியரசுத் தலைவர் அவர்கள் நடந்துகொண்டதைப் பாராட்டாமலிருக்க முடியாது. அதுபோலவே நீதிமன்ற உத்திரவு வெளியான பின்னர், அவரை வாழ்த்தாமலுமிருக்க முடியாது.

சட்டத்துக்கு மதிப்பளிக்கின்ற முறையில், துணைக் கண்டத்து மக்களின் மனோநிலை வெகுவாக மாறிக் கொண்டிருக்கிறது. சட்டமன்றத்திலமர்ந்து, ஒரு மசோதா சட்டமாவதற்குத் தம் ஒப்புதல் வாக்களிக்கின்றவர்களே, வெளியில் சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடும் போக்கு நாளுக்குநாள் மலிந்து கொண்டிருக்கிறது.

சட்டம், ஒருவரைக் கைது செய்து, கூண்டேறி நின்று பதில் கூறக் கொண்டு செல்லும்போது, வன்முறைபால் அதிலிருந்து தப்பிச் செல்வோர்கூட இருக்கிறார்கள், இவ்வாறு தப்பி வருவோரை இந்திரன், சந்திரன், வீரன் தீரன் என்றெல்லாம் பாராட்டி, வாழ்த்துக்களைக் குவிக்கின்ற மாபெரும் தலைவர்களும் நம் நாட்டில் துரதிருஷ்டவசமாக இருக்கத்தான் செய்கிறார்கள்.

இருந்த இடத்திலிருந்தே, தன் உத்திரவுகளை நிறைவேற்றிக்கொள்ளத் தகுந்த உயர்ந்த பதவியில் இருக்கும் ஒருவர் சட்டம் என்று வருகிறபோது அதற்குத் தலைவணங்கி உவமைபடைத்திருப்பதை எண்ணி மகிழாமலிருக்க முடியவில்லை.

இந்நிகழ்ச்சியின் மூலம், சட்டம் என்பது அனைவருக்கும் சமம்தான் என்பது மட்டுமல்ல; அது எல்லா தரப்பினராலும் முறையாக மதிக்கப்படவேண்டும் என்ற புதிய உணர்வையும் மக்கள் பெற்றால்தான் எதிர்கால சட்ட ஒழுங்கு, சிறப்பாக அமையமுடியும்.

★

# பதவி தேவைதானா?

மேற்கு வங்கத்தில் நக்சல்பாரிகளது அட்டகாசம் பொறுத்துக்கொள்ளக் கூடியதாக இல்லை. நாளுக்கு நாள் அட்டகாசத்தின் வேகம் மிகுந்துகொண்டுமிருக்கிறது. கல்விக் கூடங்களைக் குறிவைத்துத் தாக்குகிறார்கள். கல்விக்கூட ஆசிரியர்கள் அழிக்கப்படுகின்றனர். பரீட்சை எழுதுவோர் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர். துரத்தப்படுகின்றனர். வெடிகுண்டுகள் வீசப்படுகின்றன.

இவ்வளவு அக்கிரமங்களுக்குப் பிறகும், அந்தக் கொடியவர்களைக் கூண்டோடு அழிக்க, இப்போதுதான் சட்ட வழிகளைத் தேடிக் கொண்டிருக்கிறது மத்திய அரசு என்றால், அந்த அரசின் கையாலாகாத்தனத்தைப் பற்றி என்ன நினைப்பதென்றே புரியவில்லை,

இந்திராகாந்தி அவர்கள் தம் பிரதமர் பதவி காப்பாற்றப்பட்டால் போதும், நாடு எக்கேடு கெட்டால் என்ன என்ற இறுமாப்பில் இருக்கிறார் என்று சில எதிர்க் கட்சிகள் குறை கூறுவதுகூட, ஒருகால் உண்மைதானோ என்ற ஐயம், முளைவிடுவதைத் தடுக்க இயலவில்லை.

மத்திய அரசின் இன்றைய வாழ்வுக்கு, கம்யூனிஸ்டு கட்சியினரின் தயவும் தேவை என்ற நிலைமை காரணமாக, இவைகளை எல்லாம் தலையிட்டுத் தவிர்க்க இயலாமலிருக்குமானால், நாட்டின் சுதந்திரத்தைக் காட்டிலும், ஒரு பிரதமர் பதவி அத்துணை முக்கியத்துவமுடையதாக யாரும் கருதமாட்டார்கள், இந்த எண்ணம் மக்களிடையே வேரூன்றி விடுமானால், பிரதமர் பதவி, தானாகவே சரிந்துவிட ஏதுவாகிவிடும், பிரதமர் இந்திரா அவர்கள் இதனை உணராமலிருக்கமாட்டார் என்ற நம்பிக்கையுண்டு,

ஆனால் நக்சல்பாரிகளது விஷயத்தில் இவ்வளவு மந்தப் போக்கு எதனால் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதுதான் புரியவில்லை.

நக்சல்பாரிகளது விஷமத்தனம், தடுத்துநிறுத்தப்படாவிட்டால், அந்த காரணம் ஒன்று போதும் இந்திய சுதந்திரத்துக்கு ஆபத்து சூழ. அதுவே, இந்தியாவின் மீது குறிவைத்துக்கொண்டிருக்கும் சில பேராசை வெறிகொண்ட நாடுகளின் உணர்வினைத்தூண்டிவிட.

சுதந்திரத்துக்கே பேராபத்து உண்டாக்கக்கூடிய ஒரு தீமையைக் கெல்லி எறிவதில் காட்டப்படும் அசமந்தம், மத்திய அரசின் அறிவுத் தெளிவின்மீதே ஐயத்தை உண்டாக்குகிறது.

நக்சல்பாரிகளது கொடுமையைக்களைய விடாமல் தடுக்கின்ற அளவுக்கு இருக்கின்ற ஒரு பிரதமர் பதவிதான், நேருவின் திருக்குமாரிக்கு எதற்கோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

★




[24]

பிரிந்துகூடிய காதலரின் களியாட்டச் செய்தியைக் கேட்டுத் தெரிந்த பாண்டியன் புன்முறுவல் பூத்து, சித்திர மன்னன் அச்சிற்றிடையாள் சிந்திடும் சிரிப்பை உண்டு. சிந்தையில் கள்கொண்ட சமரனின் குதூகலத்தை எவ்விதத்தேனும் குலைத்திடல் அடாத செயலாகும் என்றுகூறி, மண்டலங்களை மறந்திடச் செய்வதும, கடமையைக்கூடத் துச்சமாகக் கருதிடச் செய்வதும், பாம்பைப் பழுதையென்றெண்ணிடச் செய்வதும், பாவையரின் பாகுமொழி தரும் சுகபோதையன்றோ! தம்மை மறந்து கவிவாணர் பாடிடுவது காரிகையின் கோலாகலத்தில் மூழ்குவதாலன்றோ என்று எண்ணினான். மேலும், நயனங்களில் நீர் ததும்பிய படி நின்ற நங்கைக்கு, ஏற்ற இந்நம்பி, நெடுநாள் பிரிந்திருந்து இன்று வந்து சேர்ந்தான்; அவள் இழந்த இன்பத்தை மீண்டும் பெற்று உவகைத் தலைப்படும் நேரத்திலே, ஊறுவிளைவித்தல் கூடாது என்றன்றோ ஆன்றோர் கூறுவர், என்று கருதினான். ஆனால் அந்த அணங்கு யார்? அவளுடைய அணைப்பிலே சொக்கிடும் காளை எந்நாட்டவன்? நீலமணி அந்த நீண்ட கன்ற கண்ணானிடம் எங்ஙனம் சிக்கிற்று? என்பதைத்தெரிந்து கொள்ள மன்னன் துடித்தான்.

மதுரமான பழவகைகளையும், மணம் வீசும் புஷ்பக் கொத்துக்களையும், கலவைச் சந்தனத்தையும், பணியாட்கள் மூலம் அனுப்பிவைத்தான். சந்தனம் உலருகிறது; பூங்கொத்துக்கள் புழுதி படிந்துள்ளன; கனிகள் கசங்கிக்கிடக்கின்றன; காதலரோ பேசிக்கிடக்கின்றனர் என்று பின்னர் வந்துரைத்தனர் பணியாட்கள். பார்த்திபன், பூங்கொடிபோன்ற அவள் ஆலிங்கனமே அவனுக்கு மதுரம்; கனியும் கலவைச் சந்தனமும், முல்லை மல்லிகை முதலியன அவனுக்கு இதுபோது தேவையில்லைதான் என்று கூறி சரி, அவர்கள் பாண்டிநாட்டு அரண்மனையில் இருப்பதும் அவர்களின் வரலாற்றினை அறிந்திடத் துடிக்கும் அரசனொருவன் காத்துக்கிடக்கிறான் என்ற நினைவும் பெறட்டும் பிறகு நாம் அவர்களைக் கண்டு பேசுவோம் என்று தீர்மானித்துக்கொண்டான். நாடாளும் மன்னனுக்கு வீடாளும் வனிதையரின் விசாலமான கண்களில் விரகம் வீசும்போது; காதலரன்றி வேறெதுவும் ஒரு பொருளாகத் தோற்றாது என்பது தெரியும். காடுகளிலே கடுவேகத்துடன் ஓடிடும் மானினங்களும், சுனை நீரருகே பெண்மான் சென்றதும், நீரருந்த நாயகி செல்லட்டும், நான் நிமிர்ந்து நின்று காவல் புரிவேன் என்று கூறுவது போலக் கொற்றவனே நின்றிடும் நேர்த்தியை மன்னன் கண்டதில்லையா? கோணல் சேட்டையால் குவலயத்தைச் சிரிக்கச் செய்யும் குரங்கும், தன் காதற்கிழத்திக்குக் கனிவுடன் கனியூட்டும் காட்சியைக் கண்டதில்லையா! என்ன அதிசயம் கண்டானோ இவன்? ஏன் இப்படி அந்த மடந்தை சென்ற திக்கையே இமைகொட்டாது பார்த்துக் கிடக்கிறான்? என்று கேலி செய்திடும் நண்பர்களைப் பொருட்படுத்தாது. காதலன் பிணைப்புண்ட குமரன், ஆயிரம் கேள்விகளுக்கும் ஒரே பெருமூச்சினைப் பதிலாகத் தருவதைப் பார்த்திபன் தன் வாலிபப்பருவத்திலே கண்டதில்லையா! தொழுவத்திலே முரட்டுக் காளைகள்; முற்றத்திலே வேட்டை நாய்கள்; இங்குமங்கும் காவலர்; இவற்றினைச் சட்டை செய்யாது எழிலிடையாள் ஒருத்திக்காக, மை இருட்டில் மதில் தாவி, மனை நுழையும் மறவரின், காதல் திருவிளையாட்டுகளை அவன் கேட்டதுண்டு. எனவே நடனராணியும், வீரமணியும், உலகையே மறந்து, உவகையில் மூழ்கிக்கிடந்தது கேட்டு ஆச்சரியப்படவுமில்லை, ஆயாசமடையவுமில்லை, இது சகஜம் என்று இருந்தான்.

“இன்னுயிரே! உன்னை இதுநாள்வரை காணாது

கலங்கினேன்; கதிகெட்டேனே என்று கதறினேன்."

"ஊசலாடிக்கிடந்த உயிர், விநாடிக்கு விநாடி விடைபெற்றுக்கொள்ள எண்ணியபோதெல்லாம், என் மன்னனை ஒரே ஒருமுறை கண்டுவிட்டால் போதும், கவலையின்றி நீ போகலாம் என்றன்றோ உயிருக்கு உரைத்தேன். உத்தமனே, ஊண் உண்டா, உறக்கம் உண்டா!"

"எழிலுடை நடனா! மலர்புரியாளின் ஆரியப்போதை ஆரியனின் மமதை, காட்டானின் கடுநெஞ்சு அங்கோர் தூர்த்தையின் காமக்கூத்து, பின்னர் சித்தக் குழப்பம், புலியால் ஆபத்து, புலத்திலே பாம்பு மலைகளிலே ஓட்டம் காடுகளிலே உறக்கம், மண் மேடுகளிலே உபவாசம், எனப் பலப்பல தொல்லைகள் அடைந்தேன்; ஆனால் உன்னைக் கண்டேன்; அவ்வளவையும் மறந்தேன்; இனிப் பயமே இல்லை."

"கண்ணாளா! முதலிலிருந்து முறையாகக் கூறும். கலிங்கப்போரிலே, நீர் நம் காவலருக்கு என்ன குற்றம் இழைத்தீர்?"

"குற்றம் இழைப்பவன் நானா? கோமளமே, நீ இப்படிக் கேட்கலாமா?"

காதலரின் இவ்வுரை தடைப்படும்படி, பாண்டியனின் பெருநகை கிளம்பிற்று, பக்கத்திலே அவன் நின்றதைக் கண்டுகொள்ளாது, காதலர் பேசிக்கொண்டிருந்தனர்.

"நீயா, குற்றம் இழைக்கவில்லை! எவ்வளவு கொடியவன் நீ? இந்த கொடியாளை துவளும்படிவிட்டுவைத்ததைவிடக்கடுங்குற்றம் ஏதுளது? என்று மன்னன் கேட்டான். வணங்கியபடி, வீரமணி "வழக்குரைப்பேன் வேந்தே! தண்டனை தரும் உரிமை உமக்குண்டு. நான் சுற்றாத இடமில்லை; தேடாத மண்டலமில்லை. இவளோ, மின்னல்போல் மறைந்து என் மனதைக் குழப்பினாள். தண்டனைக்குரியவள் இவளே" என்று வீரமணி கூறிட, வெகுண்டவள்போல நடித்து நடனா, "வேந்தே! ஆடிக்கிடந்த என்னைத் தேடிப்பிடித்திழுத்தான் இக்கள்ளன்; பின்னர் தேம்பித் தவித்திட விட்டுச் சென்றான்" என்று நடனா வழக்குரைத்தாள். "இவ்வித விசித்திர வழக்கை விசாரித்துப் பழக்கம் நமக்கில்லை என்ற போதிலும், மண்டலத்து வழக்கனைத்தும் மன்னன் விசாரித்திடுதல் முறையாதல் பற்றி, உமது வழக்கினை விசாரித்திடுவோம்; ஆனால் வழக்குரைக்கு முன்னம் வாதாடலாமோ! கட்சிக்காரரான நீவிர் இருவரும், உமது ஊர் பேர் விவரம் கூறிடா முன்பு, வழக்கை விசாரிக்க முடியுமா? காதற் குற்றவாளிகளுக்கும் காலதேச வர்த்தமானம் கேளாது, தீர்ப்பளிப்பது எங்ஙனம்?" என்று பாண்டியன் கேட்டிட முத்துப் பற்கள் வெளியே தெரிய, பவழ இதழ் விரிய, பசும்பொன் பதுமையன்ன நடனா வீரமணியைச் சுட்டிக்காட்டி, "இவர் என் காதலர்" என்றாள்.

"விளங்கிய விஷயமன்றோ இது. ஊர், பேர், விவரம் உரை" என்று மன்னன் கேட்டிட, நடனா சோழ மண்டலத்திலே, வீரருக்கு மணியாக விளங்கிய வரலாறும் கலிக்கப் போர் மூண்ட கதையும், வெற்றிச் செய்தியுடன் வீரமணி நாடு கடத்தப்பட்டான் என்ற வேதனைச் செய்தியைக் கேட்ட கூற்றும், விம்மிய விழியுடன் கிடந்த சோகமும், மருத்துவள் கொண்ட காம நோயும், மாறனின் சதியினால் சோழ மண்டலத்திலே ஆபத்துவர இருந்ததும், அரசியாரின் உதவியால் உத்தமனுடன் தான் சோழ நாட்டைவிட்டு வெளியேறியதும், இடையே உத்தமன் பிரிய நேரிட்டதுமாகிய வரலாற்றினை நடனராணி விவரமாகக் கூறினாள். மன்னன் முன் இந்த வரலாறு கூறப்பட்டதால், மங்கையின் இதழ் தப்பிற்று. இல்லையேல், அவள் தன் வரலாற்றினைக் கூறிக்கொண்டிருக்கையில், மனம் நெகிழ்ந்த வீரமணி நடனாவைப்பற்றித்தழுவி முத்தமிட எண்ணியது, ஒருமுறை இருமுறையல்ல!

வீரமணியும் பிறகு, தனது முழு வரலாற்றினையும் கூறினான். காட்டானின் சிற்றன்னையின் காமக்கூத்துப் படலத்தை வீரமணி கூறினபோது வேந்தன் விலாநோகச் சிரித்தான்.

இருவர் வரலாற்றினையும் கேட்டறிந்த பாண்டியன் "சோழனிடம், நீ மாசற்றவன் என்பதை நாமே கூறிடுவோம்; சோழமண்டலத்திலே நீர் மீண்டும் வசித்திடும் உரிமையை வாங்கித் தருவோம்; மலர்புரியில், ஆரியம் மலர்ந்திருப்பதால் தமிழகமே கெட்ட வாடையால் வாடிடும். எனவே, அந்தத் தீய செடியினை வேரோடு களைந்தெறிவோம்" என்று மன்னன் அன்புடன் கூறிவிட்டு, 'நீலமணியினை உனக்குக் கிழவனொருவன், கலிங்கப் போர் முடிவின்போது, குகையிலே தந்தான் என்றுரைத்தாயே, அவன் எப்படி இருந்தான். அவன் உருவத்தைச் சற்று விவரமாகக் கூறமாட்டாயோ" என்று வீரமணியை மன்னன் கேட்டான். வீரமணி தனது நினைவிற்குத் தெரிந்தவரையில் கலிங்கக் கிழவனைப்பற்றி வர்ணித்தான். ஆனால் கலிங்கக் கிழவன், மலர்புரி அரசியின் காதற்கூத்தனாக இருந்தவனாதால், மலர்புரி அரசியிடம் முழு விபரம் தெரிந்துகொள்ள முடியும் என்று யோசனை கூறினான்.

"இறந்தவனைப்பற்றி இவ்வளவு கவலையா! ஏதோ ஓர் நீலமணிக்கு இத்தனை விவாதமா" என்று சலித்துக் கேட்டாள் நடனா.

"பெண்ணே! உனக்குத் தெரியாது இந்த நீலமணியின் நீண்ட கதை' என்று மன்னன் சோகத்துடன் கூறிக்கொண்டே, மடியிலிருந்து நீலமணியை எடுத்தான்; அதனைக் கண்டதும், நடனராணி பதைபதைத்து, அதனை வாங்கிப்பார்த்து "இதுவா நீங்கள் பேசிய நீலமணி; இது என் காதணியன்றோ! சோழமன்னனின் வனபோஜன விழாவுக்கு நடனமாட நான் சென்றபோது, யாரோ என் காதணியைக் கவர்ந்து சென்றனர். அதுதான் இது; இதன் ஜதை எங்கே?" என்று கேட்டாள். மன்னனும் வீரமணியும் ஒரே சமயத்தில் நடனாவை நோக்கி, 'இந்த நீலமணி, உன் காதணியா?' என்று கேட்டனர். 'ஆமாம், சந்தேகமேயில்லை' என்றாள் நடனா. 'என்ன ஆச்சரியம் நடனா! நீ யார் தெரியுமா?' என்று [illegible] கேட்டான்.

பாண்டியன் பாசத்தோடு அப் பாவையைப் பார்த்து "நடனா! நீ யார் தெரியுமா?" என்று கேட்டபோது நடனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏன்? நான் சோழமண்டல அரண்மனைத் தாசியின் வளர்ப்புப் பெண்" என்றாள், தழதழத்த குரலில்.

"மகளே!" என்று பாண்டியன் கூறிக் [illegible] நடனாவின் கரத்தைப் [illegible] கொண்டு முகத்தில் [illegible] துடைத்தபடி, "என் மகளே! நீ யார் என்பது தெரியாமல் இத்தனைக் காலம் வளர்ந்து வந்தாய். உன் தாயையும் தெரியாய், நடனா! நீ என் சகோதரியின் மகள்!

மலர்புரி அரசியின் மகள்!'' என்ருன், இச்சொல்கேட்ட நடனு வீரமணி இருவரும் திடுக்கிட்டனர்.

''மலர்புரி அரசியின் வரலாற்றினை நான் அறிவேன். கூறினேனே தங்களிடம்'' என்று மணி கூறினுன். ''கூறினுய் குமர! ஆனுல் கூருதது இதுதான்; தெரியாத காரணத்தால், மலர்புரி அரசியின் மனதைக் கவர்ந்த கள்ளனே கலிங்கக்கிழவன். அது நீ அறிந்ததே. கலிங்கக் கிழவனே என் அண்ணன், நீண்டகதை அது. நெஞ்சு நோகும். சுருக்கமாகச் சொல்வேன்; சோலைக்குச் செல்வோம் வாரீர்'' என்று சொல்லி நடனுவையும் வீரமணியையும் பாண்டியன் அரண்மனைப் பூங்காவுக்கு அழைத்துச் சென்ருன். மனதிலே பல நாளைய சம்பவங்கள் ததும்பினதால், மன்னவன் வழியில் ஏதும் பேசவில்லை. பாண்டியன் நாட்டுப் பாவையா? மலர்புரி மங்கையா? அரச பரம்பரையா இந்த ஆடலழகி? என்று எண்ணி ஆச்சரியப் பட்டான் மணி. விசித்திரமாகவன்ரே இருக்கிறது. பாண்டிய நாடு தகப்பன் பிறந்த இடம், மலர்புரியோ தாயின் இருப்பிடம்; வளர்ந்ததோ சோழ மண்டலம். அரச குடும்பத்தில் பிறந்து நாட்டியத்தைப் பிழைப்பாகக் கொண்டோம்; இது என்ன விந்தை என்றெல்லாம். நடனு எண்ணி எண்ணி, பூரா விஷயமும் தெரிந்துகொள்ள ஆவல் கொண்டாள். நடனு கைக்கு எட்டாக் கனியோ என்ரோர் கவலை வீரமணிக்கு உதித்தது. மன்னன் அவன் மனக்குறையை மாற்றுபவன்போல் வீரமணியின் முதுகைத் தட்டிக்கொடுத்து, ''சரியான வீரனப்பா நீ. இந்த நங்கை அவளுடைய சிறிய தகப்பனிடம் வந்து சேரும்படி நீயன்ரே செய்வித்தாய். ஆனுலும் நீர் ஓர் கள்ளன். நடனுவைப் பறித்துக்கொண்டு போகத்தான் காத்திருக்கிருய்'' என்று கூறிவிட்டு, நடனு! அதோ பார். ஓர் பளிங்கு மண்டபம், அருமையான சித்திர வேலைகள் அமைக்கப் பெற்றது. அதன் அழகைப் புகழாதார் கிடையாது. ஆனுல் அதன் அருகே, நாங்கள் யாரும் செல்வதே இல்லை. ஏன் தெரியுமா? அந்தப் பளிங்கு மண்டபத்திலேதான், என் அண்ணன் தன் அரசுரிமையைத் துறந்தான், ஆண்டியாகியல்ல, அரச போகத்தையே அல்பமெனக் கருதும் விதத்திலே அவனுக்கு மையல் ஊட்டிய ஓர் மலர் விழியாளின் சுகபோகத்தை வேண்டி! அதோ அந்தப் பளிங்கு மண்டபப் படிக்கட்டுகளிலே என் தந்தை மண்டியிட்டுக் கேட்டார், ''மகனே என் சொல்லை மீருதே'' என்று. நானும் 'அண்ணு! அண்ணு'' என்று கூறி அழுதேன். என் அண்ணன், அன்று அங்கு நின்றதும் தந்தையின் பேச்சைக் கேட்க மறுத்ததும், இப்போது தான் என் கண்முன்பாகவே நடப்பதுபோல் தோன்றுகிறது'' என்று பாண்டியன் கூறிக் கொஞ்சநேரம் மௌனமாக இருந்தான். ஆச்சரியம் மேலுக்கு மேல் வளருகிறதேயொழிய, விளங்கக் காணுமே என்று வீரமணியும் நடனுவும் எண்ணினர் சில விஞடிகளுக்குப் பிறகு. அரசன் அங்கு கிடந்த ஆசனமொன்றிலே அமர்ந்தான், எதிரே பசும் புற்றரையில் நடனு உட்கார்ந்தாள், வீரமணி நின்றுகொண்டிருந்தான்.

'நடனு! நீ. என் அண்ணன் மகள், ஆகவே உனக்குப் பூராவிஷயமும் தெரிந்தாக வேண்டும், கேள், உன் தகப்பனின் வரலாற்றினை'' என்று பீடிகையிட்டுப் பாண்டியன், பழைய கதையைக் கூறத் தொடங்கினுன்.

'அன்று நல்ல நிலவு! நான், இதே சோலையில் வேருேர் பக்கத்திலே உலவிக்கொண்டிருந்தேன். இளவரசர் அதாவது என் தமயன் அச்சமயத்திலே தலைநகரில் தங்குவார், நான் வெளியூர்கள் சென்று, போர்வீரர் விடுதிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால், ஆறேழு திங்கள் அரண்மனையில் இல்லை. அன்று தான் ஊர் வந்தேன். இரவு, சோலையில் உலவிக்கொண்டிருந்தேன். நிலவின் அழகொளியோ, அந்த ஒளியினுல் அலங்கரிக்கப்பட்டு அபரிமிதமான அழகுடன் விளங்கிய சோலையின் சொகுசோ என் மனதினை அதிகமாக இழுக்கவில்லை, எனக்குக் கோட்டை கொத்தளம், அரண், அகழி, படை வீடு முதலியனவற்றிலேயே அதிக அக்கறை நான், மன்னனின் இரண்டாம் மைந்தன்; பட்டத்துக் குரியவர் என் அண்ணன்; என் அண்ணன் ஆட்சிக்கு நாடு வந்ததும், நான், படைத்தலைவனுக வேண்டுமென்பது என் தந்தையின் விருப்பம். ஆகவே, எனக்குப் பெரும்பாலும், படைவீடே உறைவிடமாகக் கிடந்தது. நானும் பல்வேறு நகர்களில் பாசறைகள் அமைத்துப் பூரிப்பதும், கடலோரக் கண்காணிப்பு, மலையோரக் காவல் முதலிய பாதுகாப்பு முறைகளில் புதுப் புது ஏற்பாடுகள் உண்டாக்கிக் களிப்பதுமாக இருந்தேன். மன்னனின் இரு மைந்தரும், நமது மண்டலத்துக்கு இரு கண்கள்; மூத்தவன் முடிதரித்து ஆள்வான்; இளையவன் இமைகொட்டாது நின்று எதிரிகள் நுழையாதபடிக் காவல் புரிவான் என்று மக்கள் பேசிடக் கேட்டு நான் மகிழ்வதுண்டு. மூத்தவன் தூங்காவிளக்கு, இளையவன், சுழல் விளக்கு என்றுங் கூறுவர்.''

''அன்றிரவு என்ன நடந்தது?'' என்று நடனு குறுக்கிட்டுக் கேட்டாள், மன்னன் பாலிய பருவத்தைப் பற்றியே விரிவுரையாற்றத் தொடங்கியதும். மன்னனும், நீண்ட கதையைச் சுருக்கமாகக் கூறுவதாகச் சொல்லிவிட்டு வளர்த்தக் கூடாது என்று கருதி, ''ஆமாம்! நடனு! அன்றிரவு நடந்ததைக் கூறுகிறேன்; கேள். நான் நிலவொளியில் சோலையில் உலாவிக்கொண்டிருந்தபோது, யாழின் ஒலி கேட்டது பளிங்கு மண்டபத்தின் பக்கமாக, இசை இனிமையாக இருந்தது! இனிமை என்ருல் சாதாரணமான இனிமையல்ல; போர் முறைப் பற்றிய புதுத் திட்டங்களை மனதிலே சித்திரித்துக் கொண்டிருந்த என்னையே இழுத்தது அந்த இனிமை. யாழின் இனிமையால், நான் சமர் பற்றிய சிந்தனையை மறந்தேன்; இசையில் இலயித்தேன், பாம்பையும் புலியையுங்கூட வசியப்படுத்தக் கூடியதும், புண்பட்ட நெஞ்சுக்கு மருந்திட வல்லதும் புயல் கொண்ட மனதுக்கும் சாந்தி தரக்கூடியதுமான இசையின் இனிமையில் நான் சில விநாடி, கோட்டை கொத்தளங்களை மறந்தேன்; குளிர்ந்த மனதுடன் உலவினேன். யாழும் குழலும் என் அண்ணனுக்குத் தோழர்கள். நான் கட்கத்தை எவ்வளவு நேசித்தேனே அவ்வளவு நேசம் கலையிடம் என் அண்ணனுக்கு. நான் புதுக்கோட்டைகள் கட்டி மகிழ்வதுபோல என் சகோதரன், இசைவாணரின் புதிய புதிய பண் கேட்டு இன்புறுவான். அகழியின் ஆழத்துக்கும் அகலத்துக்கும் இருக்கவேண்டிய அளவமைப்பு பற்றி ஆராய்ச்சி எனக்கு! என் அண்ணனுக்கோ மூன்று நரம்பு யாழுக்கும் ஒன்பது நரம்பு யாழுக்கும் உள்ள இசைவித்தியாச நுணுக்கத்திலே பிரேமை. எந்தப் படைகொண்டு எதிரியை முதலிலே தாக்குவது, வேழப் படை கொண்டா, குதிரைப் படை கொண்டா, என்பதிலே நான் சிந்தனையை செலவிடுவேன்; அவரோ, குழல் கேட்ட பின் யாழ் கேட்பதா, யாழுக்குப் பிறகு குழல் கேட்பதா, எது அதிக இனிமை பயக்கும், இரண்டினையும் ஏககாலத்திலே கேட்டு இன்புறுவதா என்பதிலே

யோசனையை வழங்குவார். அன்று நான் யாழ் கேட்டதும் சரி! வழக்கமான விருந்துண்டு. அவர் களித்திரு'; முக்கப் பட்டாளத்து விசேஷமாக எண்ணிக் கிடக்கவேண்டும்'' என்று எண்ணிக்கொண்டு உலவினேன்; குழலும் யாழின் இசையுடன் கலந்து இனிய ஓர் குரல் என்னை பளிங்கு மண்டபத்துக்கு நடந்திடச் செய்தது. ஓ! மங்கையின் மதுரமான கீதம். மயக்க மூட்டக்கூடிய தனி விதமான இனிமை அக்குரலிலே தோய்ந்திருந்தது. சுவை பயக்கும் குரலுடன், சோகமும் இழைந்து, கேட்பவரின் சித்தத்தை உருக்கிவிடக் கூடிய அலாதியானதாக அக்குரல் இருந்தது. என்னை ''வா! வா! வந்து கேள்! வீணான விஷயத்திலே மூழ்கிக் கிடக்கிறாயே, இதோ இனிமையுடன் இரண்டறக் கலந்துகொள்'' என்று அந்த இசை கூவி அழைத்தது! மெள்ள மெள்ள அங்கு சென்று, முல்லைப் புதரருகே பதுங்கிக்கொண்டேன். அந்த மங்கையுடன் என் அண்ணன் நிச்சயம் இருப்பாராதலால் நான் அவர் கண்களில் படாது இருக்கவேண்டுமென்று சோகம் ததும்பிற்று; சோகம் வழிந்தது அந்த மங்கையின் சுவைமிகு பாடலில்.

''வாயால் சொல்ல முடியாதடி
தேனிலந்த இனிப்பேதடி''

என்று அந்த மங்கை பாடினபோது நான் பெற்ற இன்பம், வாயால் சொல்ல முடியாதுதான். தேனில் நிச்சயம் அந்த இனிப்பைக் காண முடியாதுதான் என்று தோன்றிற்று அம்மங்கை இசைப் பயிற்சி மிகுதியும் பெற்றதனால் மட்டும் அவ்வளவு நேர்த்தியாக அந்தக் கீதத்தைப் பாடவில்லை. பாடல் அவளுடைய இருதய கீதம். கரும்பை ஆலையிலிட்டதும், ரசம் பொழிவது போல, வாழ்க்கை நிலையால். அவள் அடைந்த வாட்டம், அந்தக் கீதத்தை அவளுக்குத் தந்தது. தலைவி, தோழியிடம், தலைவனின் திருக்குணத்தைக் கூறி சோகிக்கும் பாணியிலே அமைந்திருந்தது அப்பண்.

நீ என்னடி கண்டாய் அந்த
மன்னவன் தரும் இன்பம்!
வாயாற் சொல்ல முடியாதடி
தேனிலந்த இனிப்பேதடி (நீ என்னடி)
தமிழ்பேசுதல் கேளாச்செவி
இருந்திடுவது வீணே.
அமைவாய் எனை மாதே என
அன்புடன் தழுவிடுவானே. (நீ என்னடி)

ஆஹா! நடனு! நான் அதற்கு முன்பும் அதற்குப் பிறகும் கேட்டதில்லை அவ்விதமான பண், தேனிலந்த இனிப்பேதடி என்று பாடும்போது, தேன் குழைத்துவந்து செவியில் புகுந்தது. எந்த மன்னவனோ! அவன் எவ்வண்ணம் தழுவினானோ? அவளன்றி யாரால் கூற முடியும்! அவளோ; அந்த இன்பத்தை வாயாற் சொல்ல முடியாதடி என்று பாடிவிட்டாள். நான் பரவசமானேன் மேலும் பாடினாள் அந்த வனிதை விசித்திரமான அமைப்புடன் கூடிய அப்பாடலை

'இரவே பகல் நாளே கலை
நல்விருந்துயர் காதல்
உருவே விழி வாழ்வே மணம்
இன்ப அருவி அதன் மீதிலே (நீ என்னடி)

இன்ப அருவியாம்! அதன் மீதிலே நடமாடும் நங்கை கண்ட இன்பத்தை நாம் எப்படிக் காண முடியும்! அந்தப் பாடல் முடிந்தது. என் குரலும் ''சபாஷ்!'' என்று கூறிற்று. நான் என்னையும் மறந்து பளிங்கு மண்டபம் நடிந்தேன்; பயந்து ஓர் வனிதை நின்றாள் என் எதிரில். பக்கத்திலே என்முன்னவர் இல்லை. நான் பதறினேன், ஏன் தெரியுமா? பாடி என்னைப் பரவசமாக்கிய அந்தப் பாவை பளிங்கு மண்டபத்தில் பாதி ராத்திரி வேளையில் பாகுமொழி கீதத்தால் தனது தாபத்தைக் காட்டும் நிலையிலுள்ளவள் என்று நான் கனவிலுங் கருதியதில்லை அது மட்டுமா! என் எதிரில் நின்ற அந்தச் சமயமும், அவள் அணிந்திருந்த கோலம் எப்படிப்பட்டது தெரியுமோ? மெல்லிய காவி உடை! தைலம் அதிகங் கண்டிராததும் மலர்ச்சுமை இல்லாததுமான கூந்தல்! மை இல்லாத கண்கள்! சதங்கை இல்லாத தாள்! வளையணியாத கரங்கள்! அவளுடைய மார்பில் முத்துவடமோ இரத்தின கண்டியோ கிடையாது. செவியிலே செம்பொன் நிறமான புஷ்பம், நெற்றியிலே சந்தனத்தால் பிறைவடுவில் ஓர் குறி. தவக்கோலத்திலே இருந்தாள் அத்தையல்! தவக்கோலந்தான்; ஆனால் தாபத்தின் வேகத்தை அவளுடைய கீதம் நன்கு காட்டிற்று. என்னைக் கண்டதும் அவளுக்கு விழியில் நீர் துடித்தது; எனக்குப் பொறி பறந்தது! தவச்சிரேஷ்டரென்று தந்தையாரால் பூஜிக்கப்படுவரும் குலகுரு என்று கொண்டாடப்படுவரும், கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்து, பாண்டிய நாடு பல் வளங்களோடு திகழவேண்டுமென்று பல்வகை யாகங்கள் செய்தவரும்; என் தந்தைக்கு நிழல்போல் இருந்து வந்தவரும், ஆஸ்ரமவாசியுமான, சத்யப் பிரகாசரின், ஏக புத்திரிதான் அவள்! என் அண்ணன் ஏகாந்தமாகத் தங்க ஏற்பட்ட பளிங்கு மண்டபத்திலே தங்கி, யாழ்மீட்ட. 'இன்ப அருவி அதன் மீதிலே' அவள் கண்டு இன்பம், தேனிலும் கிடையாது என்று பாடினாள், அவளுடைய மலரடியையும், என் பிதா பணிந்ததுண்டு, நானுந்தான்! சத்யப் பிரகாசர், அவள் அம்பிகையின் அவதாரமென்று கூறி இருந்தார். அவள் பூஜைக்காகத் தனியான பணிப் பெண்கள்! அவளுடைய பாத பூஜையிலே பலருக்குப் பிரியம். அவ்விதமான யோகி அன்றிரவு தாபத்தைத் தாங்காது, தனியே பாடிக்கிடந்தாள். அக்காட்சியை கண்டதும் எனக்குக் கோபம் கட்டுக்கடங்கவில்லை. என் பார்வை அவளுக்குப் பயத்தைக் கிளறிவிட்டது. அவள் உடல் நடுங்கிற்று; ஏதோ பேச வாயெடுத்தாள். என் கேலிச் சிரிப்பு; அவள் பேச்சை நிறுத்திவிட்டது. கூப்பிய கரத்துடன் என்எதிரில் நின்றாள். ஆம்! அவளை நான் தேவியின் திரு அவதாரமென்று பலமுறை கும்பிட்டதுண்டு. அவள் அன்றிரவு, என்னைக் கும்பிட்டு நின்றாள் அவள் கேட்கும் வரம் என்ன? வெளியே கூறி என் மானத்தை பறித்திடாதே என்பதுதான்! நானா விடுவேன் அந்தக் கள்ளியை! ''காவி உடை; காமச் சேட்டை! தூ!'' என்று கூறி அதட்டினேன்.



# மிஸ்டர் அப்பாலோ!

—சீயேயெம்—

தன் முதல் முயற்சியிலேயே ஆசிரியரின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டுவிட்ட மிஸ்டர் அப்பாலோ தன் பணியில் தீவிரமாக ஈடுபட எடுத்த முடிவின் எதிரொலி அவரைக் கொண்டுபோய் நவசக்தி நாளிதழின் கட்டிடத்துக்குள் நிறுத்தியதுதான் தாமதம்! ஏற்கெனவே இடிபாடுகளால் குப்பைமேடுகளாகி இருந்த அந்த இடம், சிண்டிகேட் இண்டிகேட் பிரிவினையால் விரிசல் பட்டிருந்தது. இந்த நேரம் பார்த்து மிஸ்டர் அப்பாலோவும் அங்கே போய்ச் சேர்ந்ததும், சிறிய பூகம்பம் ஒன்றால் மெல்ல அசைந்து கொடுப்பதுபோல, ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது. ஏதோ பூகம்பச் செய்தி கிடைத்துவிட்டதென்ற பூரிப்பில் ஆசிரியர் பகுதியிலிருந்து பரபரப்புடன் ஓடிவந்தவர்கள். நிலைகுத்தி நின்றார்கள். மிஸ்டர் பி. சி ஜி. யின் உடல்கூட நடுக்கம் கொடுக்கத்தான் செய்தது!

ஒரு வினாடியில் நிலைமையைப் புரிந்து கொண்ட மிஸ்டர் அப்பாலோ, பி. சி. ஜி யைப் பார்த்து மெல்ல புன்னகை ஒன்றை வீசிவிட்டு, சைகை காட்டி அவரைத் தனியே அழைத்தார்.

பயங்கர வடிவத்தில் இருக்கும் ஒரு மனிதன் தன்னை தனியே அழைப்பதை உணர்ந்து அவர் அதிர்ச்சி அடைந்தாலும், கையிலிருந்த பேனாவை ஒரு முறை தூக்கி நிறுத்தி பார்வையை அதன் மீது ஓடவிட்டதும் கொஞ்சம் தெம்பு வந்துவிட்டதோ என்னவோ தயக்கத்துடனேயே மிஸ்டர் அப்பாலோ இருக்குமிடம் நோக்கி, நடக்க முயன்றார். பேனாவைப் பார்த்ததும், பீரங்கியைப் பார்த்துவிட்ட தெம்பாகக்கூட இருக்கலாம். ஏதாவது ஆபத்தென்றால், சுட்டுப் பொசுக்கிவிடலாம் — எழுதிக் கொன்றுவிடலாம் என்ற தைரியமாகக்கூட இருக்கலாம்!

பி. சி. ஜி யின் தயக்கத்தையும், நடுக்கத்தையும் உணர்ந்த மிஸ்டர் அப்பாலோ, சிரித்துக் கொண்டே முன்னால் வந்து, பி. சி. ஜி. யின் தோள்களின் மீது கையை போட்டுக் கொண்டு, பயப்படாதீர்கள்! உங்களைப்போல நானும் ஒரு ரைட்டர்தான்! இப்போ கொஞ்சம் பொலிடிகல் மேட்டர் கலெக்ட் பண்ண இப்படிப் பயணம் செய்யறேன் என்று சொல்லிக்கொண்டே தன் விசிட்டிங் கார்டை அவர்முன் ஒற்றைக் கையால் அலட்சியமாக எடுத்து நீட்டினார்.

உனக்கு நானும் சளைத்தவனல்ல என்ற எண்ணத்தை இதயத்தின் அடியில் தேக்கிக்கொண்டு, கார்டை வாங்கிப் பார்த்துவிட்டுச் சிரித்தார்! பிறகு "பொலிடிகல்மேட்டர் கலெக்ட் பண்ண, என்னைத் தேடி வந்திருக்கீங்களே" என்றார், 'நீங்க எழுத்தாளரா இருந்தாலும், உங்களையும் ஒரு பாலிடிஷியனாத்தான் நான் மதிக்கிறேன்! உங்கள் எழுத்தெல்லாம் பொலிடிகல்' காரத்தோடதானே இருக்குது...... அதனாலே..." என்றார் அப்பாலோ.

'அதனாலே..." முடிக்கவில்லை பி சி ஜி தொடர்ந்தார் அப்பாலோ. "அதனாலே, உங்கள் ஆர்டிகிள் ஒண்ணைப்பார்த்தேன் சில கேள்விகள் கேட்கலாமின்னுதான்வந்தேன்" என்றார்.

மிகப் பெரிய அளவுக்கு உயர்ந்து நின்றார் அந்தக் குள்ள மனிதர். பெருமை பிடிபடவில்லை. ஒரு பத்திரிகை நிருபர், தன்னையும் பேட்டிகாண வந்துவிட்டாரே! உயராமலிருக்க முடியுமா? தொண்டைகளைக் கனைத்துவிட்டுக்கொண்டு "ஊம், கேளுங்கள்!" என்றார்.

'வெண்மணிப் பாவிகளே, நீங்கள் மே நாள் விழா எடுக்கலாமா? என்று எழுதி இருக்கிறீர்கள் அல்லவா! அதன் முழு விளக்கமும் எனக்கு வேண்டும்" என்றார் அப்பாலோ.

'ஊரறிஞ்ச விஷயமாச்சே அது தஞ்சை ஜில்லாவிலே, வெண்மணி என்ற கிராமத்தில் ஒரு குடிசைக்குள் 48 அரிஜனங்களையும் குழந்தைகளையும் போட்டுப் பூட்டி, அந்தக் குடிசைக்குத் தீ வைச்சுட்டாங்க! அவ்வளவு பெரிய கொடுமையைச் செய்தீங்களே நீங்க போய் தொழிலாளர் உரிமை விழாக் கொண்டாடலாமா? அப்படீன்னுதான் கேட்டிருக்கேன்!" பிசிஜியின் பதில் இது. வினாவும் விடையும் நேரடியாகவே தொடங்கின.

"தி. மு. க. காரங்கதான் அங்கே கொளுத்துனாங்களா?'!

"ஆமாம்!"

"அப்போ, அந்தக் கட்சியை அதேகாரணம் காட்டியே ஒழிக்கலாமே! ஏன் ஒழிக்க முடியலே...

"ஆயத்தம்பண்ணிட்டோமே"

"ஒரு வருசத்துக்கு மேலாயிட்டுதே!"

"இனிமேதானே எலக்ஷன் ஆரம்பமாகப் போகிறது"

"அது 1972ல் இல்லே!"

"ரெண்டு வருஷம் தானே இருக்கு; இப்பவே முஸ்தீபுங்களைச் செய்யவேண்டாமா?"

"அப்படியா! அப்ப 1972 தேர்தலிலே வெண்மணி விஷயம் தான் முக்கிய இடம் எடுத்துக்கும்!......"

"ஆமாம்!"

"சரி, சரி, அப்ப நீங்க எந்த அரசியல் பிரச்னையைப் பற்றியும் எதுவும் பேசப் போறதில்லே— எழுதப்போறதில்லையா?"

"............"

"ஓகோ! தவறாகக் கேட்டுட்டேன் போலே இருக்கு! இன்னொரு சந்தேகம்! சீனாவிலேயும், மாஸ்கோவிலேயும்கூட மேநாள் விடுமுறை விடுறதில்லே; இங்கே மட்டும் விட்டிருக்காங்களேன்னு கேட்டு இருக்கீங்க இல்லையா! அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்!"

"பின்னென்னய்யா! சிகாகோ நகரிலே, ஏதோ ஒரு சூழ்நிலைக்காகப் போராட்டம் ஆரம்பமாகி, அது மே. நாளிலே முடிஞ்சுதுன்னு அதுக்காக உலகம் பூராவையும் அதை விழாவாகக் கொண்டாடுறதா?"

"தப்புதான்! ஆனால், அந்த வெற்றியிலே, அகில உலகப் பாட்டாளிகளையும் வயப்படுத்தற ஒரு காந்தம் இருக்கே... அது...'

"காந்தமாவது, கருமமாவதய்யா! எவ்வளவு உற்பத்தி வீணாப்போகுது! இங்கேயே எல்லாம் பற்றாக்குறையா இருக்கும்போது, எதுக்கய்யா விடுமுறை

வேண்டிக்கெட்டக்குது தொழிலாளிங்களுக்கு?''

''சரிதான்! சரிதான்! தொழிலாளிங்களுக்கு விடுமுறை விடுறதினாலே, உற்பத்திக் கெட்டுப்போறதுன்னு சொல்றிங்க இல்லையா?''

''ஆமாம்!''

''புரியுது! ஆமாம், இப்போ தொழிலாளிங்களுக்கு வருஷத்துக்கு எவ்வளவு நாள் விடுமுறை கெடைக்குது?......''

''பத்தோ, பதினைந்தோ...''

''சரியாய்த் தெரியலே! போகட்டும்! இந்த விடுமுறைங்களாலெ மட்டும் கெட்டுப்போகாத உற்பத்திங்க ராம நவமிக்கும், லட்சுமண நவமிக்கும் விடுமுறை கொடுக்கிறதினாலே பாதிக்கப்படாத உற்பத்தி, நம்ம நாட்டுத் தொழிலாளிங்க, ஒரு நாள் ஓய்வெடுத்துக்கிட்டு, மகிழ்ச்சியா இருக்கிறதுனாலே கெட்டுப்போயிடுமா? சீனாவிலேயும், ரஷ்யாவிலேயும் விடுமுறை கிடையாதுன்னு உங்களுக்குத் தெரியுமா? எந்த மேதாவி, இந்த விஷயத்தை உங்களுக்குச் சொன்னான்! மேநாள் விழாவிலே, செஞ்சதுக்கத்துக்கு வந்து பிரதமரும், மற்ற மற்ற மந்திரிங்களும் கூடி நின்னு சூள் எடுத்துக்கிறவிஷயம் தெரியாதா? தொழிலாளர்கள் எல்லாம் அங்கே கூடி நின்னு மௌனம் அனுஷ்டிக்கிறது புரியாதா? சீனாவிலே கூட இப்படித்தானே நடக்குது! சரி போகட்டும்! இதை ஒரு தனிக்கட்டுரையாக்கி எழுதியிருந்தா, உங்க புத்திசாலித்தனததுக்கு ஒரு எக்சாம்பிளா எடுத்துக்கலாம்! முடிச்சப் பேட்டீங்களே, உருப்படியா இருக்கா?

வெண்மணி விஷயம், விவசாயத் தகராறுன்னு கேள்வி! தி.மு.க.வுக்கு அதிலே தொடர்பில்லேன்னு தெரியும்! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு, விழாவெடுக்கலாமான்னு கேட்கிறீங்களே? இப்பேர்ப்பட்ட நீங்க, விடுமுறை விடலாமான்னு கேடகலாமா? இது தொழிலாளர் துரோகமில்லையா? உங்களுக்குமட்டும் தொழிலாளர்களைப்பற்றி எழுதறத்துக்கு யோக்யதை இருக்கா?''

பதில் சொல்ல எதிரே பிசிஜியைக் காணோம்! தேடிப்பார்த்தார் அப்பாலோ. மிஸ்டர் பிசிஜி அருகிலிருந்த கூவத்தில் இறங்கிக்கொண்டிருந்தது தெரிந்தது. ''சரிதான், இதை நிரப்பி எழுதறதுனாலேதான் இப்படி இருக்கோ?'' என்றெண்ணிக்கொண்டு வெளியே வந்தார். அடுத்து யாரைப் பார்க்கலாம் என்ற யோசனை! முதன் முதல்லே ஒரு பத்திரிகை எழுத்தாளரையே பார்த்துட்டதினாலே, இந்த வாரப் பேட்டி முழுதுவதும் பத்திரிகைக்காரர்களையே பார்த்துவிட்டால் என்ன என்ற நினைவுபளிச்சிட்டது' பறந்தார் 'துக்ளக்' அலுவலகம் நோக்கி.

தன்னைவிட கூரிய எழுத்துக்களைக் கொண்டது அந்த ஏடு என்று சில ''அதுகள்'' சொல்லக் கேட்டிருக்கிறார் மிஸ்டர் அப்பாலோ! என்றால்தான் என்ன! தான் அகில உலகப் புகழ் அப்பாலோ ஆயிற்றே! சளைத்துவிடக்கூடாது என்ற நினைப்பு! பெரிய பெரிய தலைவர்களையெல்லாமே மடக்கிவிடக்கூடிய ஆற்றல் இருக்கும்போது, கேவலம் இந்த அம்மாமிப் பத்திரிகை எம்மாத்திரம் என்ற அலட்சியம் வேறு!

விசிட்டிங் கார்டை கையிலெடுத்துக்கொண்டு, கம்பீரமாக நடந்து போய், அதன் ஆசிரியர் அறைக்குள் நுழைந்து கார்டை மேஜை முன் வைத்துவிட்டு எதிரில் இருந்த ''மேக்கப்'' செய்யப்பட்ட நாற்காலியொன்றில் அமர்ந்துகொண்டார்!

''அப்பாலோ டுவல்வ்'' என்ற பெயரைப் படித்துவிட்டு நிமிர்ந்தார் ''துக்ளக்'' ஆசிரியர்-கம-நடிகர், தப்பு தப்பு—நடிகர்—கம—முத்தாளர்—கம—ஆசிரியரான ''சோ''

வணக்கம்!'' என்றார் ஆசிரியர்! மிஸ்டர் அப்பாலோவும் பதில் வணக்கம் சொல்லிவிட்டு, காரியத்தில் இறங்கினார் சுறுசுறுப்பாக! ''லெட் இண்டர்வியூ' என்றார்! ''ஓயெஸ் ஐயேம் ரெடி'' என்றார் துக்ளக் ஆசிரியர்.

''ஏதோ சுறுசுறுப்பா எழுதிக்கிட்டிருக்கீங்க!'' என்றார் அப்பாலோ.

''துக்ளக் அப்படின்னாவே, சுறுசுறுப்புன்னுதான் அர்த்தம் தெரியுமோ!'' இது ஆசிரியர்.

''அப்படியா! எந்த பாஷையிலே சார்!''

''சோ பாஷையிலே! 'துக்ளக்' மொழியில்!

''நியூ டிஸ்கவரி...''

''எஸ். எஸ்...... [illegible] ரீடர்ஸ் அப்படித்தான் இதை மதிக்கிருங்க! அவுங்க மனசு எப்படி இருக்கோ, அப்படியே பிரதிபலிக்க வேண்டாமா? ஒரு, பத்திரிகை, தன் வாசகர்களுடைய மனதைப் பிரதிபலிக்கலேன்னு, அதுக்குப் பேர் பத்திரிகைங்கிறதை என்னாலே ஒத்துக்க முடியாது...''

''கரெக்ட்! ஆனா வாசகர்களுக்குப் பிற்பட்டதாக ஒரு பத்திரிகை இருக்க முடியாதே! பத்திரிகை ஏற்பட்டதற்கப்புறம்தானே, அதுக்கு வாசகர்கள் ஏற்படுகிறார்கள்?''

''சாரி! என்னை மடக்கிட்டிங்க இல்லியா?''

''இதெல்லாம் இந்த உலகத்திலே சர்வ சாதாரணம்ங்கிறது உங்களுக்குத் தெரியாதா? மனசுலே பட்டதை, புட்டுப் புட்டு வைச்சுடுறீங்க, உங்க எழுத்திலே!''

''ஆமாம்! உங்க எழுத்துங்கதான் உங்க பத்திரிகை! உங்க பத்திரிகையைப் படிக்கிறவங்கதான்—உங்க வாசகர்கள்! அதினாலே உங்கக் கருத்தை வாசகர்கள் ஏற்றுக் கொள்ளுகிறதா அர்த்தம்! இந்த ஒப்புதலை, இந்தப் பத்திரிகையின் விற்பனைதான் சொல்லும்! இல்லீங்களா?''

''யூ ஆர் கரெக்ட்!''

''நீங்க தொடாத சப்ஜெக்ட் இல்லே; தாக்கப்படாத தலைவருங்க இல்லே, எல்லா எடத்திலேயும் உங்க பேனா பாயுது''

''ஆமாம், ஆமாம்! அதுதானே ஒரு எழுத்தாளனுடைய கடமை!''

''கடமை! சரியாச் சொன்னீங்க, ஆனா ஒரு சந்தேகம்! உங்க இதழிலே சேலம் இரும்பாலையைப் பத்தி ஏதோ எழுதி இருக்கீங்க...''

''ஆமாம்! சேலத்துக்கு மட்டுமா இரும்பாலை கெடைச்சுது? மைசூர் மாநிலத்துக்கும், ஆந்திராவுக்கும் கூடத்தான் கெடைச்சுது. தமிழ் நாட்டிலே மட்டும் அதுக்கு ஒரு விழா எடுக்கிறதுன்னா சுத்த நான்சென்ஸ் இல்லே அது.''

''நான்சென்சுங்க அப்படி நெனைக்கிறது தப்பில்லே ஏன்னா, சேலம் வரலாறு வேறே, விசாகப்பட்டினம், ஹாஸ்பெட் வரலாறு வேறே. சுமார் 300 வருஷமா சேலத்துக்கு வரலாறு இருக்கே!

(12-ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்:

# தேயத் திரிந்த குடுமி!

—திருவாரூர் முத்துராமன்

நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்? பிறந்தது என் குற்றமல்ல என்கிறீர்களா? சரி, என்னை ஏன் ஒரு பெண்ணாகப் பெற்றெடுத்தார்கள்? அதுவும் பெற்றவர்களின் குற்றமல்ல என்பீர்களா! அப்படியானால், நான் பெண்ணாகப் பிறந்திருப்பது எதற்காக?

எத்தனையோ பெண்கள் இந்த நகரத்திலே இருக்கிறார்களே...... அவர்கள் எல்லாம் என்னைப்போல் தானா? என்னைவிட அழகிகள் இருக்கிறார்கள். நானே பெருமைப்படும் அளவுக்குக்கூட அழகிகள் இருக்கிறார்கள். கண்டாலே கண் இமைகளைக் கரிக்கின்ற அளவுக்குக்கோர உருவங்கள்கூட இருக்கின்றன! தெரியும் எனக்கு!

அழகாய் இருப்பவர்கள் மட்டும்தான் என்னைப் போலிருப்பார்களா? அழகுக்கு எதிரிடையானவர்களுக்கும் என் போன்ற உணர்ச்சிகள் உண்டா? அவர்களைப் பற்றியெல்லாம் நான் ஏன் கவலைப்படவேண்டும்? என் கவலையே பெரியதாகிக் கொண்டிருக்கிறது. ஊரைப் பற்றிய கவலை எனக்கு ஒரு கேடா?

நான் ஒரு அழகி என்று என்னைச் சார்ந்தவர்கள் ஒரு தலையாகக் கூறக் கேட்டிருக்கிறேன்! நிலைக் கண்ணாடியின் முன்பு, நின்று அந்த கூற்றுக்களிலிருக்கும் உண்மையைக் கண்டு உவந்திருக்கிறேன்! நான் ஒரு அழகியேதான்! வெறும் அழகி மட்டுந்தானா?

பூவைப் போன்ற மென்மைக்குச் சொந்தக்காரி நான்! எனவே நான் ஒரு பூம்பாவை!

மெல்ல இயலும் தன்மை என் ஒருத்தியிடமதான் இருக்கிறது என்னைப் பொறுத்த மட்டில்—எனவே நான் ஒரு மெல்லியல்!

ஒல்லிய தொடிகளை எனக்குப் பூட்டியிருக்கிறார்கள், அவ்வளைகளே என் கரத்திலே இருப்பதனால் தான் சிறப்புப் பெறுகின்றன! ஒளியினை உமிழ்கின்றன—எனவே நான் ஒரு ஒண்டொடி!

எத்தலைச் சிறப்புக்களுக்குச் சொந்தக்காரி நான்! என் சிறப்புகளைப் பற்றியெல்லாம் நான் ஒருத்தி தானே பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது! என்னைவிட ஒரு பேதை இருக்க முடியுமா?—எனவே நான் ஒரு பெண் பேதை!

உண்மைதான்! நான் ஒரு பெண் பேதைதான்! உள்ளமிருக்கிறது; அதனுள் உணர்ச்சிகள் இருக்கின்றன. உணர்ச்சிகள் உந்திக்கொண்டிருப்பதனைத் தடுக்க முடியாததாகமிருக்கிறது. நான் தவியாய்த் தவிக்கிறேன்!

பார்த்தால் பசிதீரும் என்பார்கள்! எந்தப்பசி தீருமோ! பார்வைக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் அந்த உரை ஏறபட்டிருக்கவேண்டும்!

வீதியில் வந்து நின்று போவோர் வருவோர் எல்லாரையுமே பார்த்துக் கொண்டிருக்கலாமா? வயதுக்கு வந்து விட்டவளாம் நான்! அது மட்டும் சொல்லத் தெரிகிறது. வயதின் தேவைகள் என்னென்ன என்பதனை உணரும் ஆற்றலிருக்க வேண்டாமா?

வயதுக்கு வந்துட்டவள், வளர்ந்து கொண்டுமிருக்கிறேனே! என் எண்ணங்கள்கூட வளர்ந்து கொண்டுதானிருக்கின்றன. சிறகு முளைத்து, சிருங்கார எண்ணங்களை ஏந்தி வானவெளியெல்லாம் வரையற்று சஞ்சரிக்கத் தொடங்கிவிட்ட என் உள்ளத்தின் உலைச்சலுக்கு முடிவு உண்டா?

அடிக்கடி ஆற்றாமை மேலிடுகிறது. என்னைப் பார்க்கும்போதெல்லாம் என் தாய்க்கு எப்படித்தான் இருக்குமோ! பெருமூச்சுக்களை உகுத்துவிட்டு, 'பகவானே' என்று எங்கோ பார்த்து உச்சரித்துவிட்டுப் போய்விடுகிறாள்.

போய்விடுகிறாள் என்று சொன்னேன்! தவறு செய்திருக்கிறேன் நான்! 'பகவானே' என்று கூறிவிட்டு, அவள் வேலையைப் பார்க்கப் போனால் தான் நல்லதாயிற்றே! நான் என் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேனா? படுபாவியாய்த்தான் இருக்கவேண்டும் என்னை ஈன்றுப் புறந் தந்து விட்டவள்! கதவின் குடுமி அவளை என்ன செய்தது? அந்தக் குடுமியின்மீது அவளுக்கு ஏன் அவ்வளவு காழ்ப்பு? குடுமியைத் திருகி, கதவின் தாழினைப் போட்டுவிட்டுப் போவது என்பது அவளது அன்றாட நடவடிக்கைகளின் முக்கிய இடத்தையல்லவா பெற்றுக் கொண்டு விட்டது!

என்னைப் பெற்றபோது—நான் பெண்குழந்தை என்பதை உணர்ந்த போதே இந்த முடிவுக்கு வந்து விட்டவளைப் போலல்லவா இந்த நடவடிக்கை இருக்கிறது!

கல்வி கற்பித்தார்கள். தமிழ் இலக்கியங்களை யெல்லாம் கரைத்துக் குடித்திருக்கிறேன்! தமிழ் நாட்டின் பண்பாடு பற்றிய பெருமைதான் என் இதயத்தை முழுதாக நிரப்பிக் கொண்டிருக்கிறது! இப்போது நான் பெரியவள்! வயதுக்கு வந்துவிட்டவள்! வீதிக்கு வரக்கூடாது என்கிறாள்! உண்மைதான்! ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மைதான்! ஒரு வயதுப் பெண்—அதுவும் பண்பாட்டில் அக்கறையுடைய ஒருத்தி வீதிக்கு வரக்கூடாது என்பதும், வீட்டை விட்டுத் தாண்டக்கூடாது என்பதும் மறுக்கக்கூடாத உண்மைகள்தான்!

இந்த உண்மைகள் அனைத்தையும் உணர்ந்து செயல்பட்டுக் கொண்டிருப்பவளாயிற்றே நான்! நான் இருக்கும் இந்த வீட்டின் கதவினை குடுமித் தேயும் அளவுக்குத் தாழ்ப்பாளிட வேண்டுமா?

எப்போதாவது நான் வீதிக்கு வந்ததுண்டு. கூடவே அன்னையுமிருப்பாள். நான்கு கால்களும் நேராக கோயிலுக்குச் சென்றுவிட்டு மீண்டும் வீட்டுக்குத்தான் வந்து சேரும்! அப்படி இப்படிக் கூடத் திரும்பமாட்டேன். திரும்பினால், அங்கே யாராவது இருந்துவிட்டால் அவர்கள் நான் திரும்பிப் பின்புறம் பார்ப்பதைப் பார்த்து விட்டால், ஆயிரம் கதைகள் என்னைப் பற்றி உலவத் தொடங்கிவிடும் என்பதும் எனக்குத் தெரியும். நேர்கொண்ட பார்வை என்பார்கள் இல்லையா! அதுகூட கிடையாது. குனிந்த தலை வீட்டுக்கு வரும் வரையில் நிமிர்வதில்லை. தாயும் கெட்டிக்காரிதான். என் தலை நிமிர நேரும் என்பதற்காக வழியில் பேச்சுக்கூட கொடுக்க மாட்டாள்!

இப்படிப்பட்ட நான் இருக்கும்

வீட்டின் கதவுகள் தாழிடப்படத்தான் வேண்டுமா? குடுமிதேயும் அளவுக்கு என்றால் பாருங்களேன்! ஒரு நாளைக்கு எத்தனைத் தடவைகள் திருகப் பெற்றிருக்கும்? அன்னையின் ஒரு நாள் அலுவலில் இது தானே முக்கிய வேலை என்று சொல்லிவிட்டேனில்லையா!

அலுப்பு அதிகரித்துவிட்டது! கூடவே ஆற்றாமையும் பற்றிக் கொண்டது. ஒருநாள் மாலை நேரம். வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டிருந்தேன். தென்பாங்குத் தென்றல், இதமாக வீசிக்கொண்டிருந்தது. இதபத்தை வருடிவிட்டது போலவும இருந்தது. விழிகளை மூடிக்கொண்டு, நிலைப் படியிலேயே சில நிமிடங்கள் சாய்ந்துகொண்டிருந்து விட்டேன் எண்ணங்களை அசை போட விட்டு விட்டு!...

அந்த நிலையில் என்னை வாசலில் கண்டாளோ இல்லையோ, அது முதல் அந்தத் தாழின் குடுமிக்குத் தான் தொல்லை!

இது என் சுயமரியாதையைப் பாதிப்பதாக இல்லையா! தாய்க்கு மகள்தான் நான்! நான் அந்தத் தாயிடம் போய் சுயமரியாதைகளைப் பற்றி வாதிக்கலாமா? முறையா? உலகம்தான் ஒப்புமா? என் அடக்க உணர்ச்சி காரணமாக தாய்தான் வென்றாள்!

என்றால்தான் என்ன! குடுமி தாயினால் மட்டும்தானா தேய்ந்தது! இல்லவே இல்லை. என்னாலும் தேயத்தான் செய்தது! தாய் குடுமியைத் திருகி, கதவை மூடிவிட்டுப் போவாள்! அப்பால் நகர்ந்தால் போதும், காரணமில்லாமலேயே நான் ஓடிவந்து, அதே குடுமியைத் திருகி திறந்துவிடுவேன்! திறந்து விட்டேன் என்பது தெரிந்ததும், தாய் ஓடிவந்து மறுபடியும் தாழிடுவாள்! தொடர்கதைதான் அடுத்தடுத்து.

தாயும் கண்டிக்க முடியால் தவிப்பாள்; நானும் தடுகக முடியாமல் தவிப்பேன்.

ஒரு நாள் பாண்டியன் தன் பரிவாரங்கள் சூழ விதி உலா வந்து கொண்டிருநதான்! நாடாளும் வேந்தன் அவன்! தனிதேர் ஊர்ந்து வரும் நல்லரசன் அவன்! ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது! வண்ண மலர்களின் அலங்காரம்! வாசமலர்களின் மயக்கநிலை!

தேனுறுஞ்சும் வண்டுகள் இருக்கின்றனவே, பொல்லாதவைகள் அவை! கற்புநெறி பற்றி அவைகள் கவலைப்படுவதே இல்லை. தூ. என்ன பிழைப்பு அது! ஒன்றின்பாலமாந்து தேனை உறுஞ்சுவது......மயங்கிக் கிடப்பது; சிலவினாடிகளில் மயக்கந் தெளிந்து இன்னொருமலரிடம்சென்று சல்லாபம் செய்வது, அப்புறம் வேறொன்றிடம்! மானங்கெட்ட பிழைப்பல்லவா இது!

இந்தக் கோலாகல—இன்ப வெறியூட்டும் நிகழ்ச்சிகளின் குவியலுக்கிடையேதான் வான்தொடும் தேரில் கோதை வருகின்றான் உலா வண்டுகளின் உலா விடையே அவனும் உலா வருகிறான்.

ஊரில் மட்டுமா வண்டுகள் உலாவுகின்றன! தார்வேந்தனின் கழுத்தைத் தழுவும் பேறு பெற்ற மலர் மாலைகளிலேகூட வண்டுகள் மொய்த்துக் கொண்டுதானிருக்கின்றன.

இவை அனைத்தும் அழகுக்கு அழகு கூட்டுவன அல்லவா! அறிய முடியவில்லையே அந்தத் தாயினால். வழக்கம்போல், அன்றும், கதவின் குடுமியைத் திருகித் தாழிட்டுவிட்டாள்! நானும் வழக்கம்போலவே, தாழைத் திறந்துவிட்டேன்! திறந்து விட்டது மட்டும்மல்ல வெளியில் நிலைப்படி அருகே இமைகொட்டாது நின்றும் விட்டேன்! இமைக்கும் நேரந்தான்வயமான் தேர்க்கோதை. என் வாயிலைக்கடந்து போய்விட்டான்! திறந்தவிழிகள் இமைக்க மறந்தன! உணர்வுகள்செயல்படமறுத்து விட்டன! எண்ணம்கூட எழுச்சி பெறமுடியா தொழிந்தது.

அது என் குற்றமா? வண்டுலாம் கண்ணி வயமான் தேர்க்கோதையைக் கண்டது என்னுடைய குற்றமல்லவே! தவறு செய்திருந்தால் அது, கண்களுடையதாயிருக்கட்டும்!

தாய்—வந்தாள் கரங்களைப்பற்றி இழுததுக்கொண்டுபோய் உள்ளே விட்டு விட்டு வந்து மீண்டும் தாழினைப் போட்டாள். ஆத்திரம்தான் வந்தது. வந்து என்ன செய்ய?

இதோ அனுபவிக்கிறேனே! இலக்கியத்தில் கைக்கிளை என்பார்கள் என் நிலையை! பெருந்திணை என்பாரும் உண்டு. நான்தான் கோதையைப் பார்த்தேன். கோதையும் என்னைப்பார்க்கவேண்டும் என்பது கட்டளையா என்ன? வீதியுலா வருகின்ற வேளையில், வீட்டுக்கு வீடு என்போன்ற எழில்மேனிகள் இருந்திருக்கத்தான செய்யும்! இருப்பன அனைத்தையும் ஏந்தலே ஏற்கவேண்டும் என்றால், அது எப்படி?

அதையும் உணர்ந்துபார்க்க முடிகிறது. அத்துடன் அமைதிபெற முடியவில்லையேஅவனையே அடைய வேண்டும் என்றுமல்லவா இதயம் ஏங்குகிறது! ஏங்கித் தவிக்கிறது! என்னைவிடப் பேதை இருப்பாளோ?

நான் யாரோ? அவன் யாரோ? செந்நிலம்தான் இருக்கிறது! பெயல் மழை, பொருந்தப் பெய்தாலல்லவா நீரும் நிலமும் இணையும்! எங்கள் நெஞ்சம் இணையவில்லையே! ஏக்கம் எனக்கு மட்டுந்தானே!

இந்த ஏக்கம் என்னை ஏன் பற்றிக் கொண்டது? பருவம் காரணமா? கருவம் காரணமா?

இரண்டும்தான் என்று என்னால் உரைக்க முடியவில்லை, உணரவும் முடியவில்லை. குடுமித் தேயத் தேய கதவை மூடி மூடி, என் உணர்வுகளைத் தூண்டினாளே தாய், அவள் செய்த தவறு அது.

தண்டனையை நான் அனுபவிக்கிறேன். தாய்மீது மட்டும் குறை காணவில்லை. அவள்தான் தாழிட்டுப் போனாளே, நான் ஏன் மீண்டும் மீண்டும் வந்து தாழினைத் திறக்க வேண்டும்? வாளா இருந்திருந்தால் இந்த வம்பெல்லாம் எனக்கு வந்திருக்குமா? கோதையைக் கண்டிருப்பேனா, கோவெனக் கதறிக் கொண்டிருப்பேனா?

எல்லாம்ஒழிந்தது! குடுமிதேய்ந்த அளவுக்கு என் எழிலும் பொழிலும், எடுப்பும் பிடிப்பும் எல்லாமே தேய்ந்து விட்டன!

இப்போது எல்லோரையும் போலவே ஒருத்தி நான்! சராசரி பெண்தான் நான்! கோதையால்வந்த நோய் தீரும் மட்டும் நான் சராசரி தானே!

வீதிக்கதவே! நீயும் அனுபவிக்கிறாயே குடுமியைத் தேயவிட்டு, அதுபோல் நானும் என் மேனியைத் தேய விட்டு அனுபவிக்கத்தான் செய்கிறேன்!

என் தாயே! எவ்வளவு முன்னறிவு படைத்தவள் நீ! என் நிலைமை இப்படி ஆகக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையால் அல்லவா குடுமி தேயத் தேய தாழிட்டாய்! உணர மாட்டாதவளாக அல்லவா நான் இருந்தேன்! உணர்ந்து கொண்டபோது, என் தாயே, உன் எண்ணத்துக்கு மாறாக நான் தேய்ந்து போய்விட்டேனே! கோதையை நினைந்து நினைந்து

உருக்குலைந்து போய்விட்டேனே! மன்னிப்பாயா தாயே!

இனி வீதிக் கதவின் குடுமியில் என் கரங்கள் படவேமாட்டா! இது போல், உன் கரங்களும் படவேண்டியிராது! போதுமா தாயே!

ஊரில் உள்ள தாய்மார்கள் அத்தனைப் பேரும் கதவினை அடைத்துத்தான் வைத்திருப்பார்கள்! மகளிர், அதனைத் திறந்து வீதியை எட்டிப் பார்த்திருக்கத்தான செய்வார்கள். என்ன செய்வது! தேரேறி அல்லவா அந்தத் தென்னவன் போனான்! அதனால் அல்லவா இவ்வளவு தேய்வும். இனி இதற்கு மருந்தேது? சொல்லம்மா! சொல்ல மாட்டாயா!

—என்ற கற்பனையைக் கதை யாய்த் தர கருவாயமைந்தது முத்தொள்ளாயிரப் பாடல். அது இது:

தாயர் அடைப்ப<br>
  மகளிர் திறந்திட<br>
தேயத் திரிந்த<br>
  குடுமியவே—ஆய்மலர்<br>
வண்டுலாம் கண்ணி<br>
  வயமான் தேர்க் கோதையை<br>
கண்டுலாம் வீதிக் கதவு.

●

அடுத்த இதழில்:

பல்கலைக் கழகத் துணைவேந்தர்

## நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்

எழுதும் "போர் முழக்கம்" எனும்

## சிறப்புக் கட்டுரை வெளிவருகிறது!

9-ம பககத தொடர்ச்சி

15 வருஷமா காங்கிரசுக்காரவுங்க, கேட்டுக் கேட்டு கெட்டுப் போனாங்களே, 'சேலம் உருக்காலைத் திட்டத்தோடுதான் வருவேன்"ன்னு. ஒருதரம் நம்ப பழைய முதலமைச்சர் பக்தவத்சலம்கூட சொல்லிவிட்டு டில்லி போய் வெறும் கையோடு திரும்பி வந்தாரே தெரியுமோ? இருக்கிறாரே! காங்கிரஸ்காரன் தீர்மானம் போட்டதிலேதான் சேலம் வந்ததாக்கூட், அவுங்க பத்திரிகையிலேயே செய்தி வந்துதே! அப்போ, இதுக்கு ஒரு தனி முக்கியத்துவம் இருக்கத்தானே வேணும்!

"முக்கியத்துவம் இருக்கட்டுமேய்யா? அதுக்கு விழா வேணுமா?"

"வேண்டியதில்லையா! சரி, உங்க பத்திரிகையை, விற்று முதல் செய்ய நினைச்ச முதல் நாள், நீங்க கூட் ஒரு விழா நடத்துனீங்கல்லே..."

'துக்ளக்' ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது! "முட்டாள்! திரிகால ஞானி நான்! நான சொல்லுவேன எதையும்! தப்பை, சரின்னு சொல்லுவேன்! நெஜத்தைப் பொய்யின்னு சொல்வேன்! பொய்யை, உண்மைன்னு எழுதுவேன்! அதுதான் என் மூலதனம்! என் எழுத்தாற்றல்! என்கிட்டேயா கேள்வி கேட்கிறதே! பார், உன்னை அடுத்த இதழிலே என்னசெய்யிறேன்னு" என்று எழுந்தார், மிஸ்டர் சோ. அப்பாலோ அங்கிருந்தால்தானே!

★

நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்<br>
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்<br>
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு<br>
ஒன்றா இரண்டா உரைத்திடவே முடியாது<br>
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து<br>
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை – ஆரம்ப சுகாதார நிலையம்—குடும்பநலத் திட்ட நிலையம் ஒன்றை அணுகி தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு:

சுகாதாரம்-குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம்,

சென்னை-6.

# கல்வித் துறையில் சிக்கனம்!

நெ. து. சுந்தரவடிவேலு கருத்துரை

நாட்டின் கல்வித்துறையைப் பொறுத்த மட்டில் எத்தனையோ பிரச்னைகள் நாளும் நாளும் பிறப்பெடுத்துக்கொண்டிருக்கின்றன. மக்களது கல்விப் பிரச்னைக்கும், மனிதனது குடும்பக் கட்டுப்பாடு விவகாரத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பது போதுமான அளவு உணரப்படவில்லை; உணர்த்தப்படவுமில்லை.

காங்கிரசுக்காரர்கள் நாடாண்ட போது கல்வித்துறைக்காகச் செலவிடப்பட்ட தொகையைவிட, இருமடங்கு அல்லது தமிழக அரசின் மொத்த வருவாயில் காலபங்கு இப்போது செலவிடப்படுகிறது. என்றாலும் பிரச்னைகளும் தீரவில்லை. பரவலான கல்வியும் கிடைத்துவிடவில்லை.



கல்வியைப் பரவலாக்குவது-சிறப்பாகப் பட்டப்படிப்பை விஸ்தரிப்பது தொடர்பாக சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தம் கருத்துக்களை, கட்டுரைகள் வடிவிலும், மேடை விழாக்களிலும், பத்திரிகையாளர்களது பேட்டியின் வாயிலாகவும் எடுத்துத் காட்டிக்கொண்டே வருகிறார்கள்.

துணைவேந்தர் அவர்கள் ஒரு பேட்டியின்போது இது தொடர்பாகக் குறிப்பிட்டவைகளையே கீழே தந்திருக்கிறோம்;

1970—71 கல்வியாண்டு முதல் மேலும் 12 கலைக்கல்லூரிகளில் மாலை நேர வகுப்புக்கள் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு கல்லூரியும் அதனதன் கட்டிடத்தில் பகுதி நேரக்கல்வி நிலையமாகவும் விளங்கவேண்டும் என்பதே எங்கள் நோக்கம். கல்விக்காகச்செய்யப்படும் ஏராளமான முதலீடு இதனால் மிச்சப்படும் அதிகப்படியான கட்டிடங்களும் உபகரணங்களும் தேவையில்லாது போகும்.

உற்பத்திப்பெருக்கும் தொழில்களைப் பார்த்துக்கொண்டே நம் இளைஞர்கள் கல்வி கற்க இதனால் வசதி ஏற்படும்.

வருகிற கல்வி ஆண்டில் மதுரைப் பல்கலைக்கழகத்திலும் சில கல்லூரிகளிலும் மாலை வகுப்புகள் துவக்கப்படும்.

ஐ. ஏ. எஸ். மற்றும் அகில இந்திய போட்டித் தேர்வுகளில் தமிழக மாணவர்கள் சாதனை ஓரளவு தாழ்வாகவே இருக்கிறது. காரணம் திறமைமிக்க மாணவர்கள், இந்தத் தேர்வுகளுக்குப் போகாமல் தனியார் துறை நிறுவனங்களில் வேலை தேடிப்போய்விடுகிறார்கள். தனியார் துறையில் தான் ஒருவர் தனது திறமையைக் காட்டும் வாய்ப்புகள் நிரம்ப உள்ளன.

பொதுத்துறையில் ஒருவர் தனது மேலதிகாரியைப் பார்க்க அவர் அவரது மேலதிகாரிகளைப் பார்க்க வேண்டிய நிலையே உள்ளது.

தமிழக அரசின் உள்துறையினர் மத்திய அரசின் மானிய உதவியுடன் சென்னையில் ஒரு நிலையம் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோருக்கு ஐ. ஏ. எஸ். ஐ. பி. எஸ். மற்றும் அகில இந்தியப் போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக நடத்தப்படுகிறது.

நமது மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளில் விடையளிக்கும் உத்திகளையும் பேட்டிகளின்போது எப்படி நன்றாகச் செய்வது என்றும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

தேர்வு என்ற கண்ணோட்டம் தவிர, அறிவு என்பது வேகமாக விரிவடைந்து வருகிறது என்பதும் நமது பாடங்களிலும் பாடத் திட்டத்திலும் நாம் மற்றவர்களைவிடப் பின் தங்கிவிடக் கூடாது என்பதும் மறுக்க முடியாத உண்மை ஆகும்.

கல்லூரிகளில் பணியாற்றும் விரிவுரையாளர்களின் சராசரி வயது சுமார் 25 தான். படித்துவிட்டு நேராகக் கல்லூரி விரிவுரையாளராகிவிடுகிறார்கள். இவர்களுக்கு இளம் மாணவர்களைக் கையாளுவதற்கான பயிற்சி தரப்படவேண்டும்.

பாடத்திட்டம் மாற்றப்படும் முன் ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி அளிக்கப்படுவதும் அவசியம்.

★

எத்தனையோ சுழல் வட்டங்களைக் கொண்டிருக்கிறது சமுதாயம்!

எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகளின்கலவையாகக் கலங்கிக்கொண்டிருக்கிறது குடும்ப வாழ்க்கை!

'காஞ்சி'யில்!

தத்துவ மேதை

T. K. சீனிவாசன் M.P.

ஜூன் முதல் வாரத்திலிருந்து

எழுதுகிறார்!

இடையிடையேதான் இன்பம் — எழுச்சி — ஏற்றம் என்பதெல்லாம்!!

புரையோடிய சமுதாயச் சிக்கல் ஒன்றைப் பின்னணியாய்க் கொண்ட புதிய தொடர் கதை!



# அன்று கூறினார் அண்ணா!

அன்புள்ள நண்பா!

சென்ற 10-5-70-ம் நாளைய "காஞ்சி" இதழின் தலையங்கம் பற்றி, சில விளக்கங்கள் கேட்டு நீ எழுதியிருப்பதுபோலவே நெய்வேலியில், நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் நமது பேரன்புக்குரிய பல தோழர்களும், தங்கள் மனக் குறையைச் சுட்டிக்காட்டி மடல் விடுத்திருக்கிறார்கள்.

வந்திருக்கின்ற அத்தனை மடல்களும், நெய்வேலி நிறுவனத்தின் பாசிசப் போக்கு பற்றியும், நடைபெற்று முடிந்த வேலை நிறுத்தம் தொடர்பான உண்மை விவரங்களும் முழுமையாக இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டியும் எந்த சூழ்நிலையில்—எப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தின் காரணமாக வேலை நிறுத்தம் செய்யவேண்டியிருந்தது என்பது பற்றி விளக்கங்கள் தந்தும் இருக்கின்றன.

முழுமையும், அனைத்தையும் படித்து முடித்துவிட்ட பிறகு "காஞ்சி" கழகத் தோழர்களுக்கு எதிராக எழுதி இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. பெற்ற கடிதங்களின் மூலம் பெற்ற விளக்கங்கள், நிலைமைகளை முழுமையாகப் புரிந்துகொள்ளவும், நடைபெற்று முடிந்த பேயாட்டங்களைப் பற்றியும் துல்லியமாகப் புரிந்துகொள்ளப் பயன்பட்டன.

'காஞ்சி,' தன் தலையங்கத்தின் மூலம் தவறுகளைத்தான் கண்டித்திருக்கிறது; தவறு செய்பவர்கள் யாராயிருந்தாலும், கண்டிக்கத் தக்கவர்கள். தண்டிக்கத் தக்கவர்கள் அல்லர் என்று நம் நெய்வேலி நண்பர்கள் வாதாடமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்!

தவறு செய்ய நேர்ந்தது ஏன் என்ற விளக்கத்தை சட்டம் ஏற்றுக் கொள்ளாதல்லவா! சட்டம், நாம் கூடியிருந்து மதிக்கப்படுகின்ற போதுதானே, தன் கடமையையும் சரிவர நிறைவேற்ற முடியும்!

நமது காவல் துறையைப் பற்றி மிகுதியும் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அந்த நண்பர்கள். அந்தத் துறையின் அமைச்சர், நமது பெருமதிப்புக்குரிய கலைஞர் அவர்கள்தான் என்பது தெரிந்தும் இப்படி குறைபட்டிருப்பது வருத்தமளிக்கத்தான் செய்கிறது. தவறுகள் எந்தப் பக்கமிருந்தாலும் நிச்சயம் கண்டிக்கப்படத்தான் வேண்டும்.

நண்பா! வடபுலத்திலே சில மிருகவெறி கொண்டவர்கள் காந்தியாரது படங்களை நாசம் செய்தனராம்! செய்தியைப் படித்தபோது நம் உதிரம் சூடேறத்தான் செய்தது! அதனை அடுத்து உலகப் புரட்சிக்கே வித்திட்ட—ஒப்புமையற்ற தலைவன் லெனினது படத்தை வேறு சிலர் நாசம் செய்தார்கள் என்ற செய்தியினைப் படித்து சிந்தைக்குள்ளேயே அழுதோம்! நண்பா, நெய்வேலியில் நிகழ்ந்த நீசத்தனங்களின்போது, உனக்கும் எனக்கும் உண்ணும் உணவாய்—வாழும் வாழ்வாய்—எண்ணும் எண்ணமாய், எழுதும் எழுத்தாய், சிந்திக்கும் சிந்தனையாய், இருந்துகொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களது படமே வீசி எறியப்பட்டது—நாசம் செய்யப்பட்டது — மிதித்து இழிவு செய்யப்பட்டது என்பதை அறியும்போது, நம்மால் 'நவசக்தி' கட்டுரையாளர்போல் மகிழ்ச்சி தெரிவிக்க முடியுமா?

இந்த இழிவினைச் செய்தவர்கள் எவ்வளவு பெரிய அந்தஸ்திலிருந்து கொண்டு செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது! அதற்காக...

பழிக்குப் பழி என்று நம்மை நாம் மாற்றிக்கொள்ள நினைத்தால், நாம் அறிவு படைத்தவர்களாக—சிந்தனையாற்றல் பெற்றவர்களாக வளர்க்கப்பட்டிருக்கிறோம் என்பது பொய்யாகவல்லவா ஆகிவிடும்! யாரின் படம்—நாசம் செய்யப்பட்டது என்று எண்ணிக் குமுறுகின்றோமோ அந்த ஒருவரின்மீது நமக்கு உண்மையான பற்றில்லை—பொய்க் குமுறல் அது என்றல்லவா ஆகிவிடும்!

நெய்வேலி — நிலைமைகளைப் பற்றி நமது கம்யூனிஸ்டு நண்பர்கள் ஒருவிதமான விமர்சனத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மையான பழியையும் நம்மீது சுமத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நமது நெய்வேலி நண்பர்கள் அஞ்சல், மூலம் வன்முறைகளுக்குக் காரணம் நிருவாகத்தின் யதேச்சாதிகாரமான போக்குதான் என்பதை, ஆதாரங்களுடன் விளக்கி இருக்கிறார்கள்.

நண்பா, 10—5—70ம் நாளைய 'காஞ்சி'யின் தலையங்கம் எழுதப்பட்டபோது கிடைத்திருந்த தகவல் அனைவருக்கும் மார்ச் 20-ல் ரூபாய் முப்பது ஊதிய உயர்வு ஏற்கப்பட்டது என்பதும், அதிலே சில தொழிற் சங்கங்கள் திருப்தி பெறவில்லை என்பதும் தான்!

நிருவாகம், ஒப்பந்தத்தை மீறும் மனத் துணிவு பெற்றிருக்கலாம்! சில பிரிவினருக்கு மட்டும் உயர்வு தந்துவிட்டு, சில பிரிவினரை வஞ்சிக்கலாம் என்பதெல்லாம், அந்த நண்பர்கள் உலகுக்குத் தெரிவித்த புதிய தகவல்கள் அல்லவா!

நெய்வேலி நிறுவன உயர் அதிகாரிகளைப் பற்றி சில ஆண்டுகளாகவே, மனக்குறை இருப்பது, அவ்வப்

# நடவடிக்கை உண்டு!

நெய்வேலியில் நடைபெற்றவேலை நிறுத்தம் தொடர்பாக ஏற்பட்ட வன்முறைகள் பற்றியும், அதிலே காவல் துறையினர் அத்து மீறி நடந்துகொண்டிருக்கிருர்களா என்பதனை அறியும் பொருட்டும் தம் சார்பில் அதிகாரி ஒருவரை, நெய்வேலி பகுதிக்கு அனுப்ப தமிழக முதலமைச்சரும், போலீசுத்துறை அமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் முடிவெடுத்திருப்பதாக செய்தி தந்திருக்கிருர்கள் அச்செய்தியில் ''தொடர்ந்து, அமைதிகாக்கும் வகையில நம்முடைய தொழிற் சங்கத்தை நடத்துகின்ற கழகத் தோழர்களையும், மற்றும் அனைத்துக் தொழிலாளர்களையும் ஒத்துழைக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்; இந்நிகழ்ச்சியை வைத்து கழக அரசின் மீது பழி போடுவதற்காக அரசியல் நோக்கோடு சில கட்சிக்காரர்கள் நடத்துகின்ற பிரசாரத்துக்கு நமது கழகக் கண்மணிகள் பலியாகமாட்டார்கள் என்றும் நம்புகிறேன்'' என்றும் தெரிவித்திருக்கிருர்கள். அதிகாரியின் அறிக்கை கிடைத்து. தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது, கடமை உணர்வோடு



நடந்துகொள்ளும் பொறுப்பு கழகத் தவருககும் உண்டு.

# மூடுங்கள்! மூடுங்கள்!!

இந்தியாவிலுள்ள சில அமெரிக்க கலாசார நிலையங்களையும், நூலகங்களையும் மூடிவிட வேண்டும் என்பதாக மத்திய அரசு, உத்திரவிட்டிருப்பது தொடர்பாக சில விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. துணைக் கண்டத்தில் உள்ள ஐநதேஐந்துக்கு மட்டும்தான் இந்த உத்திரவாம்! ஒரு நாட்டில் ஒரு அந்நியநாடு, கலாச்சார நிலையம் அல்லது நூலகம் தொடங்குவதென்ருல் சில அனைத்துலக விதிமுறைகளை, ஒரு காலத்தில் வியன்னுவில் நடைபெற்ற ஒரு அனைத்து நாடுகள் மாநாடு வகுத்துள்ளதாம். இந்த விதிமுறைகளுக்கு மாருக, மூடும்படி உத்திரவிடப்பட்டுள்ள நிலையங்கள் இயங்குவதாகவும், வகுக்கப்பட்டுள்ள அந்த விதிமுறைகள் நிலையங்கள் இயங்கும் ஒரு நாட்டுப் பார்லிமெண்டின் கருத்தை ஏற்பதாகவும், அதற்குக் கட்டுப்பட்டிருப்பதாகவும் இருக்க வேண்டும். அரசின் முன் அனுமதியும் கூடபெற்றுத் தீரவேண்டும். இந்த நடைமுறைகளை அனுசரிக்காத நிலையங்களைத்தான் மூடும்படிக் கேட்டிருக்கிரேம் அல்லது பார்லிமெண்டரி நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து, அனுமதி பெறக் கோருகிரேம் என்பதுதான் புதிய விளக்கம்! மே பதினெட்டாம் நாள் என்பது இதற்குத் தரப்பட்டுள்ள இறுதிக் கெடுவாம்! யு எஸ். கான்சல் அலுவலகம் இதுவரையில் எந்தப் பதிலும் தரவில்லையாதலாலும், எந்த நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளாததாலும் பலவந்தமாக அவை மூடப்படும் என்றுதான் நம்பப்படுகிறது!

★

போது வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனுல் இந்தக் குறை, எந்த அளவுக்கு ஒழுங்கான முறையில் உரிய இடத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது? இல்லையே!

16,500க்கு மேற்பட்ட ஊழியர்கள், பல்வேறுபட்ட கருத்து மாறுபாடுகளுக்குரிய தொழிற் சங்கங்களிலே அங்கம் வகிக்கிருர்கள். ஒரு பிரச்னை என்று உருவாகி விடுகிறபோது, பல்வேறுபட்ட கருத்துக்களும், பல்வேறுபட்ட செயல் திட்டங்களும்தான் அவற்றின் மூலம் உருவாக முடியும்! இவை அனைத்தும் செயல்படத் தொடங்கும்போது உரிய பலன்—உரிய வகையில் எப்படிக் கிடைக்க முடியும்? ஒவ்வொரு தொழிற் சங்கமும் ஒவ்வொரு கொள்கையின்கீழ் கட்டப்பட்டுள்ளவை! கொள்கை மோதல்கள் அல்லவா முதலிலே இடம் பற்றும்!

பல்லாயிரக் கணக்கான கழகக் கொடிகள் வானலாவப் பறந்த நெய்வேலி பகுதியில், இன்று ஒன்றைக் கூடப் பார்க்க முடியவில்லை—அனைத்தும் நாசம் செய்யப்பட்டன என்று குறைபட்டிருக்கிருர் நண்பர் ஒருவர்!

இது எதைக் காட்டுகிறது! எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இதுபோன்ற வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை யல்லவா காஞ்சியின் தலையங்கம் எடுத்துக் காட்டுகிறது,


பொதுத் துறை என்பது, அரசு நிறுவனமாயினும் அதிலே எந்தக் காரணத்தாலும் ''முதலாளித்துவ மனப் போக்கு'' எந்த முறையாலும் நுழைய அனுமதிக்கக்கூடாது—என்பதை யல்லவா. அத்தலையங்கம் எடுத்துக் காட்டுகிறது!

பேரறிஞர் அண்ணு அவர்களது அறிவுரைகள் நம்மை சரியான பாதையிலே வழி நடத்திக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் தம் திறமைமிக்க நிர்வாகம், நமக்குச் சரியான வாழ்வுப் பாதையை அமைத்துக் கொடுத்துக் கொண்டுதா னிருக்கிறது: இன்னமும் கொடுக்கப்படும். தேவைப்படுவதெல்லாம், நாம், கழகத் தோழர்கள் என்ற உணர்வோடு, இது பேரறிஞர் அண்ணு அவர்கள் அமைத்துக் கொடுத்த ஆட்சி என்ற உணர்வோடு இயங்கவேண்டும்; வெறும் உணர்வு மட்டும் போதாது, கலைஞர் தம் கரத்தை வலுப்படுத்தும் வகையில் நம் சிந்தனைகளும், செயல்களுமிருக்க வேண்டும்—என்பதுதான்!

அறிஞர் அண்ணு அவர்கள் அன்றே சொன்ஞர்கள்: 'நடந்தவை நடந்தவையா யிருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையா யிருக்கட்டும்'' என்று!

இச்சந்தர்ப்பத்தில் நாம் அதனை நினைவுபடுத்திக் கொள்வது தக்க பலன் தருமில்லையா நணபா!

அன்புள்ள,



# கோ-ஆப்டெக்ஸ்

## கைத்தறி ஆடைகள்

தரமானவை
நெடுநாள்
உழைப்பவை
சிக்கனமானவை

பலவிதமான டிசைன்களில்
கிடைப்பதுடன் வண்ணம் மாருமலும்
உழைக்கும் நைஸ் ரக வேஷ்டிகளும்
ரெடிமேட் ஆடைகளும் உள்ளன.

இன்றே எங்கள் ஷோ ரூம்களுக்கு
விஜயம் செய்யுங்கள்!

**தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,**

எழும்பூர், சென்னை.

போன்: 82121, 82122

எஸ். கே. சம்பந்தன், பி. ஏ., எம். பி.,

தலைவர்!


ஆசிரியர், வெளியிடுபவர், சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
53, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.